
# இறையியல் களஞ்சியம்

மலர் : 07 செப்தெம்பர் 2001 இதழ் : 9



மைக்கும
வாழ்வுக்கும் வழி நானே”

# இறையியல் களஞ்சியம்

## காலாண்டு வெளியீடு

# IRAI – IYAL KALANJIYAM

## *TAMIL THEOLOGICAL JOURNAL*

செப்ரெம்பர் - டிசெம்பர் 2001 இதழ் 09

*இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி*
*மருதனார்மடம் – சுன்னாகம்*
*இலங்கை*

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | அருட்தந்தை டீ. ஆர். அம்பலவானர் |
| துணை ஆசிரியர்கள் | : | அருள்திரு. ரி. தேவநேசன்<br>அருள்திரு. வி. என். தர்மகுலசிங்கம்<br>அருள்திரு. பென்சமின் ஜெயராசா |
| நிர்வாகி | : | திரு. சி. பி. பவின்க் |
| நிர்வாகக் குழு | : | சகோ. ஏ. எஸ். ரூபன்<br>சகோ. ஏ. ஆர். றோகான்<br>சகோ. எஸ். செல்வந்தா |
| ஆலோசகர் | : | பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் |
| கணனி அச்சுப்பதிப்பு | : | புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் |
| வெளியீடு | : | இலங்கை கிறிஸ்தவ குருத்துவக்கல்லூரி, மருதனார்மடம் — சுன்னாகம்.<br>(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்) |
| PUBLICATION | : | CHRISTIAN THEOLOGICAL SEMINARY OF SRI LANKA<br>MARUTHANARMADAM – CHUNNAKAM<br>(For Private Circulation Only) |

# இறை வணக்கம்

ஆரபி　　　　　　　　　　　　　　　　　　அகவல்

வானமும் புவியும் வழங்குயல் லுயிர்களும்
ஞானமா யமைத்தருள் நாதனே போற்றி,
மானிட வுயிர்க்கு நின் மகத்வநற் சாயலைத்
தானளித் தருள் செயுந் தற்பரா போற்றி,
சீவன் சுகம்பெலம் சிறந்தஞா னம்பொருள்
மேவடி யார்க்கருள் விண்ணவா போற்றி,
துன்பம் துயரம் சோர்வினி லடியாரை
அன்பொடா தரித்திடும் அண்ணலே போற்றி,
அற்புத மாயெமக் கடைக்கலம் புரிந்து
தற்காத் திரட்சைசெய் தயாநிதி போற்றி.
பாவியை மீட்டுநற் பரகதி சேர்க்க மெய்ச்
சீவனா யுதித்திடும் தெய்வமே போற்றி,
உய்ந்நெறி கொடுத்தெமக் குயர்ந்த நம் பிக்கை
துய்யசீ வியமருள் சோதியே போற்றி,
கர்த்தனே கருணைக் கடவுளே போற்றி,
அத்தனே நின்னிணை யடிபோற்றி போற்றி,

அலெலன் ஆபிரகாம்.
காரைநகர், யாழ்

# பொருளடக்கம்


| | | பக்கஎண் |
|---|---|---|
| 01) | ஆசிரியர் பார்வையில் . . . | - v |
| 02) | கரோல் விசுவநாதபிள்ளை எழுதிய சுப்பிர தீபம், **- பேராயர் ஜெபநேசன்** | - 01 |
| 03) | அறை கூவல் விடும் ஆண்டவர் பணி, **- வண. ரீ. தேவநேசன்** | - 09 |
| 04) | மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களின் 175ஆம் ஆண்டு நிறைவு, **- வண. ம. கருணாகரன்** | - 14 |
| 05) | பல்கலைக் கழக ஆன்மீகப் பணியகம், **- வண. ம. யூட்சுதர்சன்** | - 21 |
| 06) | திருச்சபையில் இன்று காணப்பட வேண்டிய விழுமியங்கள், **- வண. பென்ஜமின் ஜெயராஜா** | - 26 |
| 07) | இறைவன் தந்த திருச்சபை நாயகன், **- வண. வீ. என். தர்மகுலசிங்கம்** | - 28 |
| 08) | குழந்தை இயேசு, **- சகோ. டி. எஸ். சொலமன்** | - 31 |
| 09) | ஆசிய இறையியலாளர்: அறிவர் டி. ரி. நயில்ஸ் அவர்கள் **- வண. டி. ஆர். எ.** | - 34 |
| 10) | இன்றைய போர்ச் சூழ்நிலையில் திருச்சபைகளின் . . . **- சகோ. எஸ். செல்வந்தா** | - 41 |
| 11) | கவிதைகள் : 1) நாம் நம்மவருக்காக, | - 45 |
| | 2) வாழ்த்துப்பா, | - 46 |
| | 3) நாங்கள் திருப்பணியாளர், | - 48 |
| | 4) இறைவன் | - 49 |
| 12) | செய்திமடல் **- சகோ. எ. எஸ். ரூபன்** | - 51 |


எழுத்தாளரின் கருத்துக்கள் அவரவரையே சாரும்

# ஆசிரியரின் பார்வையில்...

இன்றைய இக்கட்டான நிலைமை - தெற்கே அரசியல் குழப்பம் - வடக்கே விமானக் குண்டு வீச்சு - கிழக்கே தாக்குதல் அறிவிப்பு - நமது ஜனாதிபதி, இன்னும் தொடர்ந்து யுத்தத்தை நடத்த விரும்புவதாகத் தெரிகிறது - கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கான ஆயத்தங்களை புறத்தே தள்ளி விட்டதுபோல் காணப்படுகிறது.

நாட்டின் தலைவரின் போக்கைக் கவனிக்கும் போது - "அதிகாரம் கெடுகின்றது, முழுமையான அதிகாரம் முழுமையாகக் கெடுகின்றது" - என்ற முதுமொழிதான் எமது நினைவுக்கு வருகிறது. நாட்டின் நலனைக் கருதாமல், பதவியைத் தக்க வைப்பதற்கு தான்தோன்றித் தனமாகச் செயல்படுவது தக்கதல்ல - "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்ற வள்ளலார் வாக்கு, அரசியலுக்கும் பொருந்தும். இதைப் பற்றி ஆழந்து சிந்திப்பது நல்லது.

தமிழர், தாம் தொடர்ந்து ஏமாற்றப்படும் நிலையிலிருந்து விழித்தெழ வேண்டும் - 'எலிக்கு வாலாக இருப்பதைவிட, ஆனைக்குக் காலாக இருப்பதிலேதான் சிறப்பிருக்கிறது' என்பதை உணர வேண்டும். அன்று தந்தை செல்வா, இறுதியாகக் கூறியது - 'தமிழர்களின் எதிர்காலம் இறைவனின் கரங்களில் இருக்கிறது - எனவே, உறுதியான விசுவாசத்தோடு, தமிழ் மக்களின் சுய உரிமை வாழ்வுக்காக, அயராது இறைவனை இறைஞ்சுங்கள்' - அவர் செவிமடுப்பார் என்ற நம்பிக்கையுடன் நன்றி செலுத்துங்கள்.

இந்த நம்பிக்கையை இறைமக்கள் உள்ளங்களில் வேரூன்றச் செய்வது - இறையியல் கல்லூரி ஆசிரியர், மாணவர்கள், சபைக்

குருமார் ஆகியோரின் தலையான கடமையென்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறோம். இறுதியாக - ஓர் ஆங்கில அறிஞர் கூறிய வாக்குடன் முடிக்க விரும்புகிறேன் -

"No man can become A Great Leader of Men – unless He has The Milk of Human Kindness in His own Heart – and leads by Suggestion and Kindness - rather than by Force".–

இந்த இதழில், மிக்க பயனுள்ள கட்டுரைகள் தரப்பட்டுள்ளன - நமது பேராயர் எழுதிய ஆய்வுக் கட்டுரை நமது சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது. அரசரடி இறையியல் கல்லூரி இசைத் துறைப் பேராசிரிய அருட்கவிஞர் எம். கருணாகரன் அய்யர் அவர்கள், மாயூரம் வேதநாயகரின் 175ஆம் பிறந்த நாளை நினைவு கூர்ந்து எழுதிய கட்டுரையை வாசித்து மகிழுங்கள் - வண. ஜூட் சுதர்சன், ஆன்மீகக் குருவின் பணியைப் பற்றி விளக்கிய கட்டுரை, திருப்பணியாளர்கள் அறியவேண்டிய கருத்துக்கள் பொதிந்துள்ளது - அடுத்த இதழ், கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டி வெளிவரும், இந்நாட்களில், அனைவரும் பயன்பெறக் கூடிய பொருள் பொதிந்த கட்டுரைகள், கவிதைகள், சிறுவர்க்குரிய சிறந்த ஆக்கங்களை வரவேற்கிறோம். எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் எங்களுக்குக் கிடைக்கத்தக்கதாய் உங்கள் கட்டுரைகளை அனுப்புங்கள்.

அன்பர்களே, உங்கள் விமரிசனங்களை எழுதுங்கள் - உங்கள் கடிதங்கள் தான் எங்களை ஊக்கப்படுத்தும் - மறவாமல் எழுதுங்கள்.

*டீ. ஆர். அம்பலவாணர்*

"நாடெல்லாம் பாழாய்ப் போகிறது - ஏனெனில்
உள்ளத்தில் ஆழ்ந்து சிந்திப்போர் அருகிவிட்டனர்."
(திருமறை)

"*Relentless negotiation only solution to the present crisis*"

# கரோல் விசுவநாதபிள்ளை எழுதிய சுப்பிர தீபம்

- பேராயர் எஸ். ஜெபநேசன் -

இலங்கையின் சமய வரலாற்றிலே 19ம் நூற்றாண்டு ஒரு முக்கியமான காலகட்டமாகும். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் இருந்து கிறிஸ்தவ நற்செய்தித் தொண்டர்கள் யாழ்பாணத்துக்கு வந்து, கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினார்கள். இவர்களுடைய பிரசங்கங்களையும் கண்டன நூல்களையும், கட்டுரைகளையும் எதிர்த்து சைவசமயத்தவர்கள் நூல்களை எழுதினார்கள். அப்படியாக எழுதப்பட்ட நூல்களில் மிக முக்கியம் வாய்ந்தது சைவதூஷண பரிகாரம் என்ற நூலாகும். இந்த நூலை ஆறுமுகநாவலர் எழுதினார். இந்த நூலைக் கண்டித்து எழுதப்பட்ட கிறிஸ்தவ நூலே "சுப்பிரதீபம்". சுப்பிரதீபம் என்றால் Great Lustre மிகுவொளி என்று பொருள்படும். (1) இதனை எழுதியவர் டானியல் கரோல் விசுவநாதபிள்ளை என்ற அறிஞர் ஆவார்.

சுப்பிரதீபம் 1857ம் ஆண்டு மானிப்பாயில் இருந்து Ripley and Strong என்ற அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த நூல் கிறிஸ்தவ சமய வரலாற்றில் மட்டுமன்றி தமிழ் இலக்கிய வரலாற்றிலும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. ஏனெனில் இதிற் காணப்படும் உரைநடை தமிழ் பண்டிதர் மட்டுமே இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடிய உரைநடையாகும். தமிழ் உரைநடையின் ஆரம்ப கால நிலையை விளக்குவதற்கு சுப்பிர தீபத்தில் உள்ள பகுதிகளை இலக்கிய வரலாற்று ஆசிரியர் எடுத்துக் காட்டுவர்.(2)

## வைரவநாதபிள்ளை விசுவநாதபிள்ளை - டானியல் கரோல் (Caroll)

வைரவநாதபிள்ளை விசுவநாதபிள்ளை சுதுமலையில் உள்ள ஒரு சைவ குடும்பத்தில் 1820ம் ஆண்டு பிறந்தவர். ஆங்கிலமும் விஞ்ஞானமும் கற்கும்

ஆவலினாலே வட்டுக்கோட்டை செமினரியில் தனது 12ம் வயதில் சேர்ந்து கொண்டார். ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையும் 1820ம் ஆண்டு பிறந்தவர். இருவரும் ஒரே காலத்து வட்டுக்கோட்டை செமினரியின் மாணவர்களாவார். விசுவநாதபிள்ளையின் மதிநுட்பமும் ஆற்றலும் மிஷனரிமாரைப் மிகவும் கவர்ந்தன. செமினரியின் ஆறு வருட கால கற்றைநெறி முடிந்த பின் அவர்கள் நடாத்திய இறையியல் வகுப்பிலும் விசுவநாதபிள்ளை மூன்று வருடகாலம் கற்றார். பின்னர் வட்டுக்கோட்டை செமினரியில் ஆசிரியராகி 1842ம் ஆண்டு தொடக்கம் செமினரி 1855ம் ஆண்டு மூடப்படும் வரை கணிதம் அளவையியல் என்பவற்றைப் போதித்து வந்தார். அப்பொழுது தான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்கு ஆசிரியராகப் பணி யாற்றினார்.

விசுவநாதபிள்ளை தமது அறிவினாலும் அன்பினாலும் கவர்ந்த செமினரி யின் இரண்டாவது அதிபர் ஹென்றி றிச்சேர்ட் ஹோய்சிங்டன் Henry Richard Hoisington என்பவராகும். அவர் அதிபராக இருந்த காலத்தில் டானியல் கரோல் என்ற பெயரை ஏற்று கிறிஸ்துவின் அடியவரானார். செமினரியில் ஆசிரியராக இருந்த பொழுது மாணவர்க்கென 'வீச கணிதம்' என்ற நூலை எழுதினார். "அல்ஜிபிரா" என்ற ஆங்கில கணித பாடம் மரபுச் சொற்றொடர்களையும் இலக்கிய செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்டது – வீச கணிதமாகும். வீசகணிதத்தில் விசுவநாதபிள்ளையின் இலக்கிய புலமையும் கணிதப் புலமையும் நன்கு புலப்படுகின்றன.

நீண்ட காலம் மிஷனரிமாரின் நம்பிக்கை நட்சத்திரமாய் இருந்தவர் விசுவ நாதபிள்ளை. 1855ம் ஆண்டு செமினரி மூடப்பட்ட பின்பு ஒரு வருட காலம் "உதயதாரகைப்" பத்திரிகையின் தமிழ் ஆசிரியராகத் திகழ்ந்தார். அதன் பின்னர் சென்னைக்குச் சென்று அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து கொண்டார். 1857ம் ஆண்டு சென்னைப் பல்கழைக்கழகம் தனது முதலாவது பட்டதாரிப் பரீட்சையை நடாத்தியது. அந்தப் பரீட்சையில் இரண்டு பேர் மாத்திரம் சித்தியடைந்தார்கள். அவர்களில் ஒருவர் கரோல் விசுவநாத பிள்ளை, மற்றவர் அவருடைய மாணவரான சி. வை. தாமோதரம்பிள்ளை.

இந்தியாவில் பணியாற்றிய பின்னர் இலங்கை திரும்பி தமது மனைவியின் சொந்த ஊரான சங்கானையில் சிறிது காலம் வாழ்ந்து 1880ம் ஆண்டு காலமானார். இப்பொழுதும் சங்கானையில் தேவாலய வீதியில் ஒரு வளவு கரோல் வளவு என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

கரோல் விசுவநாதபிள்ளை இந்தியாவுக்குச் செல்ல முன்னரே சுப்பிர தீபத்தை எழுதினார். ஏனெனில் இதன் முதலாவது பதிப்பு மானிப்பாயிலும், இரண்டாவது பதிப்பு சென்னையிலும் அச்சிடப்பட்டதாக தெரிவிக்கின்றது. யாழ்பாணத்து மிஷனரிமார் உருவாக்கி வளர்த்த உயர் ஜாதி கிறிஸ்தவர்கள் பலரும் இந்தியாவுக்குச் சென்ற பின்னர் கிறிஸ்தவத்தைத் கைவிட்டு விட்டு சைவசமயத்தைத் தழுவிக் கொண்டனர். ஹென்ஸ்மன் குடும்பத்தினர், ஆர்னல்ட் குடும்பத்தினர் இதற்கு விதி விலக்கு.

டானியல் கரோல் விசுவநாதபிள்ளை இந்தியாவில் இருந்த காலத்தில் தமது கிறிஸ்தவ விசுவாசத்தை முற்றாக விட்டு ஆறுமுகநாவலரின் முக்கியமான உதவியாளரில் ஒருவராக மாறினார். ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை இவருடைய மாற்றத்தை அறிந்து வேதனைப்பட்டார். தாம் எழுதிய பாவலர் சரித்திர தீபம் என்ற நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"சென்னைத்துரைத்தன வாசம் இவரது கிறிஸ்துமதானுசாரக்கொள்
கையைப் பலபட்சப்படுத்தி விட்டதனாற் சேற்றில் நட்டகம்பம்
போல இவரது கிறிஸ்துமத விசுவாசம் அந்நிய காலத்தில் ஈடாடினது
மெய்யாப்பெரும் பரிதாபமே." (3)

விசுவநாதபிள்ளை மிஷனரிமாருடைய அன்பராகவும் கிறிஸ்தவ பக்தருமாய் இருந்த காலத்தில் எழுதப்பட்ட நூலே சுப்பிர தீபமாகும். யாழ்பாணத்தில் அமெரிக்க மிஷனரிமார் தமது கல்வி ஆற்றலினாலேயே மிகச் சிறந்த புலவர்களையும் வைராக்கியம் மிக்க மரபு வாதிகளையும் தமது சமயத்தில் சேர்த்துக் கொண்டார்கள் என்பதற்கு அரிய சான்றாக விளங்குவது சுப்பிர தீபமாகும். இவ்வளவு சிறந்த செந்தமிழ் நடையில் கிறிஸ்தவம் இதற்கு முன்னரும் விளக்கப்படவில்லை. இதற்கு பின்னரும் விளக்கப்படவில்லை. இது 1 \ 8 அளவில் 60 பக்கங்களைக் கொண்ட நூலாக விளங்குகின்றது. இந்த நூலில் காணப்படும் பண்டித நடைக்கு பின்வரும் பகுதி சிறந்த உதாரணமாகும்.

சமஞ்செய்து சீர்தூக்குங் கோல் போல்
அமைந்தொருபாற் கோடாமை"யை
அணிகலகைச் சூடியபெரியோரே,

எபேசியருடைய தியானாளே பெரியவள்" - என்றும், முற்காலத்திற்கு குமிறொளி செய்த தீமித்திரியு சமாசீயரைப் போலச் சைவ சமாசீயரிட்ட சைவதூஷண பரிகாரக் குமுறலைக் கேட்டீர்கள். அவர் சத்திய நூலில் ஏற்றித் தூற்றிய குற்றங்களின் ஆதார சூன்யத்தைத் திரிப்பிரகரண

அதிப்பிரபலநியாய ஒளியிற் கண்டீர்கள். சத்திய மார்க்கத் தேசிகர் கைக் கொண்ட கனித்திரப் படைக் கலத்தால் யாழ்பாணத்தைப் பற்றிய விக்கிரக ஆராதனை எனுந் தொல்லாரப்புற்றுச் சில்ல பொல்லமாய் வெட்டுண்ட தினானன்றே. அவ்வாரா சத்தியத்தையுஞ் சற் போதகர்களையுஞ் சீறிக் கடிக்க வெளிப்பட்டது? ஆயினும் வெளிப்பட்டமை செயமங்கள குறியாகை யால் யுத்தசன்னத்தாரான பத்த சனங்களெல்லோரும் பரமசேனாதிபதியின் பாதார விந்தத்தைச் சித்த மகிழ்வாய்த் துத்தியஞ் செய்தல் கடமை. (4)

டானியல் கரோல் விசுவநாதபிள்ளை வட்டுக்கோட்டை செமினரியிலும் அதன் முதாலவது அதிபராகிய டானியல் பூவர் மீதும் மிகுந்த அபிமானம் உடையவராக இருந்தார். தமது கிறிஸ்தவப் பெயராக டானியல் என்ற பெயரைத் தெரிந்தார். ஆகையினாலே சுப்பிரதீபம் என்ற நூலில் மிஷனரி மாரை, **"வாய்மையும் தூய்மையும் நீதியும் நேர்மையும் அன்பும் பொறையும் சிறந்து விளங்கிய பூர் ஐயர் முதலிய மகான்கள்"** என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு மரபு வழித் தமிழ் புலவன் ஒரு மேனாட்டு மிஷனரியை இவ்வாறு போற்றியதனை தென்னாசியாவின் வேறு எந்தப் பகுதியிலும் காண முடியாது.

> "அவர் (இறைவன்) அன்று போல இன்றும் பூலோகமெங்குஞ் சஞ்சரித்து மகாவாக்கிய அருள் மழையைப் பொழிகின்றார்"

அவருடைய சத்தம் தொனியாத பாஷையும் இல்லை, அவரடி நாடாத தேசமும் இல்லை. உஷ்டணங் குடிபோன உத்தரதேச நீர்க்கட்டு படிக்கட்டத்திலும் உஷ்டணங் குடி கொண்ட கஷ்டாரணிய மணலிலும் அவர் பாதச்சுவடு ஒளிருகின்றது. பூலோகத்திலே நியுதாம்சமான யாழ்பாணமும் அவரடி தேயப் பெற்றது.

வாய்மையும் தூய்மையும் நீதியும் நிறையும் அன்பும் பொறையும் சிறந்து விளங்கிய பூர் ஐயர் முதலிய மகான்கள் இங்குதித்து அலகைவாயிலும் உலகவாயிலும் உடல்வாயிலும் அகப்பட்ட ஆன்மாக்கள் வீடுபெற்றுய்யும் படி இரட்சபெருமானின் திருநாமத்தை உபதேசித்து கைமாறுகருதாது உதவு கின்ற மேகம் போல வைதீக்கலென கீகாகல்விப் பொருளை வழங்கி னார்கள். அதுகண்டு அழுக்காறு கொண்ட சில சத்திய விரோதிகள் மித்தியாரோபமான குற்றங்களையும் பழமொழிகளையும் அவர்களிலும் அவர்கள் போற்றுகின்ற சத்தியவேதத்திலும் ஏற்றினார்கள். நச்சுக்கும்மி தொடுத்தார்கள் அச்சிற்கும்மி அடித்தார்கள். கிறிஸ்தவனை முன்னிலை யாக்கி "எ.ம. சந்திரசேகர பண்டிதர், அனேக வருடங்களுக்கு முன்னே

சமைத்த சமவாத கண்டனச் சென்னிலையைச் சிறிது மாற்றி சொற்ப விகாரத்தை ஏற்றி முன்னிலையைப் பாதிரியே என்று திரித்துப் பல தூசணங்களைத் தூற்றிய காரணத்தாற் சைவ தூசண பரிகாரம் என்ற சிறப்புப் பெயரைச் சூட்டி யாம் பரம காருணிகராகிய பரசிவனது திவ்விய பிரசன்னத்தினாலேயே செய்தோம்.

"இஃது யாழ்ப்பாணம் வேதாகமோக்த சித்தாந்த சைவப்பிரகாச
சமாசியரால் கத்தியரூபமாகச் செய்தது"

என்று நன்று பிரசித்தம் செய்தார்கள். (5)

கரோல் விசுவநாதபிள்ளை மிஷனரிமாரைப் போற்றுவதிலும் சைவசமயத்தை எள்ளி நகையாடுவதிலும் சிறந்து விளங்குகின்றார். ஆனால் கிறிஸ்தவத்தை மக்கள் விரும்பும் வண்ணம் விளக்கினாரோ என்றால் அதில் அவர் பூரண வெற்றியடையவில்லை என்று கூறவேண்டும். இதற்கு காரணம் அவர் பண்டித நடையில் எழுதியதும், சைவ தூஷணப் பரிகாசத்துக்கு பதிலடி கொடுப்பதுமே நூலின் முக்கிய நோக்கமாகக் கொண்டதுமே காரணங் களாகும்.

கிறிஸ்தவம் மீது அபிமானம் கொண்ட ஓர் சைவப் பெரியார் இந்த நூலை வாசித்து விட்டு இந்த நூலினால் தாம் சிறிதும் கவரப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். கிறிஸ்தவ சமயத்தின் ஆணிவேர் எனக் குறிப்பிடப்படுவது கெட்ட குமாரன் உவமையாகும். ஒரு முறை லாசன் பண்டிதர் திருமறையில் உள்ள சகல நூல்களும் அழிந்து போனாலும் கெட்ட குமாரனுடைய உவமை கிறிஸ்துவின் நற்செய்தியை உலகிற்கு பறைசாற்றித் திரியும் என்று குறிப்பிட்டார். கிறிஸ்தவத்தினுடைய மூலாதாரக் கொள்கையாகிய இரட்சிப்பு இந்த நூலில் அருகியே விளக்கம் பெறுகின்றது. இதனாலேயே இந்நூல் பிற்காலத்தில் பெரிதும் படிக்கப்பட்டதாக இருக்கவில்லை. கிறிஸ்துவின் குற்ற நிவாரண பணியில் விசுவாசம் வைக்க வேண்டும் என்பது கூறப் படுகின்றது. கரோல் விசுவநாதபிள்ளை ஒரு கால கட்டத்தில் இதனைப் பூரணமாக ஏற்றுக் கொண்டார்.

புண்ணியங்கள் இன்றி மோட்சம் சேர்தல் கூடாதென்று இந்த வாக்கியங் களில் ஒரு பொழுதுஞ் சொல்லப்படவில்லை. அன்பின் நற்கிரியை செய் கின்ற விசுவாசத்தை உள்ளடக்காதவன் புறங்கொண்ட கிறிஸ்தவ சமயம் பயன்படாதென்றும் மாத்திரஞ் சொல்லப்பட்டது. திரிகரண ஒருமைப்பாடான வழிபாடே வழிபாடு, வெளி வேஷங்களால் மோட்சம் அடைதல் கூடாது. (6)

சுப்பிரதீபம் 1857ம் ஆண்டு எழுதப்பட்டது நாவலர் மொழி பெயர்ப்பு என்னும் வேதாகம மொழி பெயர்ப்பு 1852ம் ஆண்டுதான் வெளியிடப்பட்டது. நாவலர்

மொழி பெயர்ப்பு அல்லது யாழ்ப்பாண மொழி பெயர்ப்பு என்ற தமிழ் வேதாகமம் தென்னிந்திய கிறிஸ்தவர்களின் எதிர்ப்பினால் கைவிடப் பட்டது. ஆனால் சிறிது காலம் யாழ்ப்பாணத்தில் இந்த மொழி பெயர்ப்பு மக்கள் மத்தியில் பிரபல்யமாக இருந்ததற்கு சுப்பிரதீபம் சான்றாகும். இந்த நூலில் எழுதப்பட்டிருக்கும் வசனங்கள் யாவும் நாவலர் மொழி பெயர்ப்பில் இருந்து எடுத்தாளப்பட்டிருத்தலைக் காணலாம். இதற்கு உதாரணமாக பின்வரும் வசனங்களைப் பார்க்கலாம்.

"தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. என் சுவிசேசத்தின் படி
தேவன் யேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுசருடைய அந்தரங்கங்களை
குறித்து நியாய தீர்ப்புக் கொடுக்கும் அந்நாளிலே நியாயப்பிரமாணம்
இல்லாமல் அழிவார்கள். நியாயப் பிரமாணம் உடையவராய்ப்
பாவம் செய்தவர்கள் நியாயப் பிரமாணத்தின்படி தீர்ப்புப் பெறுவார்கள்"

(உரேமர் உ:யக – யங)

"அவரை விசவாசிக்கிறவன் தண்டனைக்குட்பட்டான். அவரை விசவாசி யாதவனோ தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில விசுவாசி யாதபடியினாலே அவன் இப்பொழுதே தண்டனைக்குத் தீர்க்கப்படு கின்றான். ஒளி உலகத்திலே வந்திருந்தும் மனுசர்கள் தங்கள் கிரிகைகள் தீமையுள்ளவைகளாயிருப்பதினாலே அந்த ஒளியிலும் இருளை விரும்பு கின்றார்கள் இதுவே தண்டனைத் தீர்ப்புக்குக் காரணம்"

(யோவான் கூ:யசு, யகூ)

"சாட்சிப் பெட்டியின் மேலிருக்கின்ற இரண்டு கெரூபிகளின் மத்தி யினின்றும் கிருபாய் சயத்துக்கு மேலாய் நான் உனக்குத் தரிசனமாகி இஸ்ரவேல் சந்ததியாருக்கு நான் கட்டளையிடும் யாவையும் உன்னிடத் திலே சொல்லுவேன் என்றும் யெகோவா சொன்னார்"

(யாத். உரு:உஉ)

"மோசே தேவனுடன் பேசும்படி சபையின் ஆவசத்துக்குட் பிரவேசிக்கையில் தன்னுடனே பேசுகிறவரினுடைய சத்தம் சாட்சிப் பெட்டியின் கிருபாசாயத் தின் இரண்டு கெரூபிகளின் மத்தியினின்றுந் தோன்றக் கேட்டான். அங்கே அவர் அவனுடன் பேசுவார்"

(எண் எ:அகூ)

"யெகோவா இராச்சியம் பரிபாலனம் பண்ணுகிறார், சனங்கள் நடுங்கு வார்களாக, அவர் கெரூபிகளின் மத்தியிலேயே வீற்றிருக்கிறார்"

(சங்: கூகூ:ச)

கிறிஸ்தவ திருமறையை நன்கு படித்து மிஷனரிமாரின் அருந்துணைவனாக விளங்கிய கரோல் விசுவநாதபிள்ளை பின்னர் கிறிஸ்தவ சமய பரம்பலுக்கு விரோதியாக மாறினார். இவருடைய வாழ்க்கை வரலாறு ஓரளவிற்கு வட்டுக்கோட்டை செமினரியின் பலத்தையும் பலவீனத்தையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது. ஆறுமுகநாவலர் சைவசமயிகளின் எதிர்ப்புக்கு தலைமை ஏற்று அதனை உத்வேகத்துடன் நடத்தினார். அவர் தமது முதலாவது சைவ பிரசங்கத்தை வண்ணை சிவன் கோவிலில் **31-11-1847**இல் நிகழ்த்தினார். **(6)** நாவலரின் இயக்கத்தினால் கவரப்பட்ட வாலிபர்கள் கிறிஸ்தவ சமய எதிர்ப்பு உணர்வை வெளிக் காட்டினார்கள். வட்டுக் கோட்டை செமினரி மாணவர்களும் இவ்வாறு மிஷனரிமாருக்கு விரோத மான ' உணர்ச்சியைக் கொண்டிருந்தார்கள். பிற்கால மாணவர்கள் மிஷனரிமார் படிப்பித்த கல்வியை விரும்பினார்கள். அவர்கள் போதித்த மதத்தை விரும்பவில்லை. இதன் காரணமாக **1855**இல் செமினரி மூடப் பட்டது.

ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய சைவ புத்தெழுச்சி இயக்கம் தென் இந்தியா விலும் பரவியது. ஆறுமுக நாவலரை இளம் பராயத்தில் இருந்தே கடுமை யாக எதிர்த்து வந்த கரோல் விசுவநாதபிள்ளை சிதம்பரத்தில் ஆறுமுக நாவலரைச் சந்தித்து, அவரை தாம் சற்குருவாக ஏற்றுக்கொண்டார். தான் அது காரும் சைவ நிந்தனை பேசியதற்கும் எழுதியதற்கும் பிராயச் சித்தமாக தமது சட்டையில் குற்றி இருந்த பொன்னூசியை கழற்றி, இருந்த நெய்விளக்கில் காய்ச்சி இருந்த தமது நாவைச் சுட்டுக் கொண்டார். சைவ சமயத்திற்கு திரும்பிய பின் "காலதீபிகை" என்ற நூலை எழுதினார். அந் நூல் அச்சுவாகனம் ஏற முன்னரேயே சங்கானையில் இருந்த அவரது மனைவியின் இல்லத்தில் இருந்து காணாமற் போய்விட்டது. (7)

சுப்பிர தீபகத்தைத் தந்த கரோல் விஸ்வநாதபிள்ளை இறுதியில் தமது கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டொழிந்தாலும் அவர் இயற்றிய நூல் அமெரிக்க மிஷனரிமாருக்கு பெருமை சேர்த்துக் கொடுத்தது என்றால் அது தவறாகாது. யாழ்ப்பாணத்தின் சைத் தமிழ் மரபின் மூலவேருக்கே அவர்கள் சென்று அந்த மூல வேர்களின் துணைகொண்டு கிறிஸ்தவத்தைப் பரப்பி னார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் கிறிஸ்தவத்தை சுதேச நிலைப்படுத்துவதில் அவர்கள் கொண்டிருந்த ஆர்வத்தையும் உறுதிப்பாட்டையும் "சுப்பிர தீபம்" கோடிட்டுக் காட்டுகின்றது.

## உசாத்துணை நூல்கள்:

(1) சுப்பிர தீபம் - Great Lustre, மிகுவொளி சுப்பிர தீபம் Rev. Miron Winslow – A Comprehensive Tamil and English Dictionary 1862.

(2) செல்வநாயகம். வி – தமிழ் உரைநடை வரலாறு 1957, பக்கம் 105.

(3) சதாசிவம்பிள்ளை ஆர்னல்ட் – பாவலர் சாத்திர தீபகம், 1884, பக்கம் 254

(4) கரோல் விசுவநாதபிள்ளை – சுப்பிர தீபம், பக்கம் 59

(5) மேற்படி நூல் பக்கம் – 4 – 6

(6) ஜெபநேசன் – வட்டுக்கோட்டைச் செமினரியும் இலங்கையிலே தமிழர் சிந்தனைப் போக்கிலும் ஏற்பட்ட மாற்றங்களும், பக்கம் – 329.

(7) குலரத்தினம் க. சி. – செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் – 1989, பக்கம் 108.

## The Cross in Politics

So I am concerned with the development of a political theology. But I have resolved also to reflect more intensely than before, On the meaning of the cross for theology, church and society. In a culture that glorifies success and happiness an is blind to the suffering of others, remembering that at the centre of the christian faith there stands an Unsuccessful suffering and shamefully dying Christ who can open man's eyes to the truth, can shatter the tyranny of pride and awaken solidarity with those who are hurt and humitated by our culture. Remembering that God raised up a crucified one and made him the hope of the world can help the churches to break off their alliance with the powerful and enter into the brotherhood of the lowly. To be sure, the lowly have advocates enough, but what they need are brothers.

*- Dr. Jurgen Moltman -*

# அறைகூவல் விடும் ஆண்டவர் பணி

*- வண. ரி. தேவநேசன் -*

ஆண்டவராகிய என் தலைவனின் ஆவி என் மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறை சாற்றவும் கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். (எசா. 61:1)

இது பழைய ஏற்பாட்டு காலத்தின் செய்தி கடவுளின் உந்துதலால் ஏசாயா வில் கொடுக்கப்பட்ட செய்தி, புதிய ஏற்பாட்டின் லூக்கா 4: 18–19 வசனத் தில் லூக்கா ஆசிரியரால் எடுத்தாளப்படுகிறது. கி.மு. 6ம் நூற்றாண்டில் சமய சமூக சூழலில் எழுந்த இப்பகுதியை ஆண்டவரின் கொள்கை விளக்கம் என்று லூக்கா தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## கி. மு. ஆறாம் நூற்றாண்டின் நிலை

கி. மு. ஆறாம் நூற்றாண்டு சமய ரீதியில் மிக முக்கியம் வாய்ந்த ஒரு நூற் றாண்டாகும். இக் காலத்தில் இந்தியாவிலுள்ள சமயங்கள் பல தோன்றின. பின்னர் இவை பல கேள்விகளுக்கு உள்ளானதையும், நாம் அறிந்ததே. குறிப்பாக பிராமண ஆதிக்கத்தையும், ஒடுக்குதலையும் எதிர்த்தும், வேத வேள்வியின் அதிகாரத்தை மறுத்தும் சமண சமயமும், புத்த சமயமும் தோன்றின. இவ்வாறு தோன்றிய சமயங்கள் இந்து சமயத்திற்கு அறை கூவலாக விளங்கின. அகிம்சையையும், அன்பையும் வெளிப்படுத்திய சமண சமயத்தின் 24வது தீர்த்தங்கராக விளங்கிய மகாவீரர் தோன்றிய காலம் கி. மு. 6ம் நூற்றாண்டாகும்.

வாழ்க்கை துன்பமயமானது, துன்பத்திற்கு காரணம் ஆசை (பேராசை) ஆசையை அழிக்க முடியும். இதற்கு எட்டு நல்ல வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று முழங்கிய சித்தாத்தர் என்ற கௌதம புத்தரும் தோன்றிய காலமும் இதுவேயாகும்.

விவசாயம் செய்கின்றவன் நீதியை செய்கின்றான். வேளாண்மைக்கு முக்கியம் கொடுக்கிறவன் கடவுளின் நீதியை விரும்புகின்றான் என்று உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து போதித்த சரதுஸ்துரிய சமயத்தை பாரசீகத்தில் ஏற்படுத்தியவர் என்று கூறப்படும் சரதுஸ்தர் தோன்றிய காலமும் இதுவேயாகும்.

சமய புரட்சியும் மறுமலர்ச்சியும் தோன்றிய காலமட்டுமல்ல, சமூக விடுதலை பற்றிப் பேசிய மகான்கள் தோன்றிய காலமும் 6ம் நூற்றாண்டேயாகும்.

## இன்றைய இலங்கைச் சூழல்

மூன்றாம் உலக நாடுகளில் அல்லது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நிலவும் சமய, சமூக நிலை பாரிய பின்னடைவை எட்டியுள்ளது. சுதந்திரத் திற்கு முன் அந்நியரின் ஆட்சியால் பல விதங்களில் சுரண்டப்பட்டு, வறுமைக்குள்ளானது. சுதந்திரத்திற்குப் பின் வந்த பல அரசியல் வாதி களும் சுயநல நோக்கோடு வாழ்ந்துவருவதினால் நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டனர்.

இவர்கள் தான் சமயத்தையும், சாதியையும் இன்று அரசியலாக்கி குளிர் காய்கிறார்கள். சமயக் காழ்ப் புணர்ச்சியைத் தூண்டி விட்டும், சாதியைத் தூண்டி விட்டும் சமுதாயத்தைத் துண்டு போடுகிறார்கள். இதனால் நல்லுறவு கெட்டுவிட்டது. நாட்டுணர்வு மங்கி விட்டது. அமைதி, நீதி இல்லை, மனித நேயமும் இல்லை. சிதைந்த சமுதாயமாக இன்று சீழ் வடிகிறது. சீழ்வடிந்த சமுதாயத்தை அங்குள்ள உடைந்த, புண்பட்ட மனங்களைக் குணப்படுத்த ஆளில்லை அல்லது பற்றாக்குறையாக உள்ளது.

மேலும் ஒடுக்கப்படுவோர், தாழ்த்தப்படுவோர், ஓரங்கட்டப்பட்டோர், கூலித் தொழிலாளர்கள், ஏழைப் பெண்கள், போதைக்கு அடிமைப்பட்டோர், அனா தைக் குழந்தைகள், சிறையிலிருப்போர், காணாமற் போனோர், மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இன்று எமது இலங்கைத் தீவின் ஜனத்தொகையின் பெரும் பங்கை அடக்கியுள்ளனர்.

## யாருடைய பணி

இந்த கடவுளின் மந்தையாகிய மக்களுக்காக, அவர்களின் விடியலுக்காக குரல் கொடுப்பது யார்? இவர்களைத் தாங்கி இவர்களது சுமையைச் சுமப்பது யார்? இதில் கிறிஸ்தவர்களின் பங்கு என்ன? என்ற கேள்விகள் மனிதனின் செவிகளைத் தொடுவது மட்டுமின்றி, உள்ளத்தையும் ஊடு

ருவிக் குத்துகின்றது. 'கலங்காதே, திகையாதே, நான் உன்னோடு கூட இருப்பேன், எனது நீதியின் வலது கையினால் உன்னைத் தாங்குவேன்'. 'புல் உதிரும், பூ உலரும், என் வார்த்தையோ என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்' என்ற கடவுளின் வார்த்தைகளை வெறுமனே நற்செய்தியாக அறிவித்துவிட்டு இன்றைய கிறிஸ்தவர்கள் செயல்படாது இருக்க முடியுமா? பழைய நற்செய்தி முறைகள் மட்டும் தான் இறைப் பணிக்குப் பொருத்த மானது என்று கூறி, சூழலுக்கு பொருத்தமற்றதைச் செய்து திருப்தி யாயிருக்கப் போகிறோமா? ஆண்டவரின் அறைகூவல் பணியை செய்ய இன்னுமொரு மோசே பிறக்க காத்திருக்க போகிறோமா? அல்லது கோரேஸ், ஏசாயா, எரேமியா போன்றோரை எதிர்பார்த்து இருக்கப் போகிறோமா? இவை விடியலை தேடும் மக்களின் மனத்துடிப்பு!

## பொருள் பொதிந்த வாழ்வு

ஆதிக்கப் போக்கினால் அவல நிலையில் இருக்கும் சமூகத்திற்கு விடு தலை வாழ்வு அளிக்கும் கிறிஸ்தவ வாழ்வு, பொருள் பொதிந்த வாழ்வாக அமைவது காலத்தின் கட்டாயமாகும். முதலாவதாக இறைப்பணியில் ஈடுபடு பவர் பின்வரும் அணிகலங்களை உடையவராக இருக்க வேண்டும்.

(1) பணிவிடையாளர் தனது குடும்பத்திற்கும், திருச்சபைக்கும், சமூகத் திற்கும் நல்லவராக, நல்லுறவு கொண்டவராக, மனித நேய விரும்பி யாக இருக்க வேண்டும்.

(2) பணிவிடையாளர் துன்புறும் மனுக்குலத்துடன் தன்னை இணைத்துக் கொள்பவராக இருக்க வேண்டும்.

(3) பணிவிடையாளர் நல்ல மேய்ப்பனைப் போல் இருக்க வேண்டும்.

(4) பணிவிடையாளர் துணிவு மிக்கவராக, கொள்கைப் பிடிப்போடு பணியாற்ற வேண்டும்.

(5) பணிவிடையாளர் (திருப்பணிவிடையாளர்) உரையாடல் பணியில் ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை ஆண்டவராக அறிக்கையிட்டு, உலகமெங்கும் நற்செய்தியைத் திருத்தூதர் அறிக்கையிட்டார்கள். இந்த திருத்தூதுவர்கள் ஆண்டவரின் உண்மை அடியார்களாக வாழ்ந்து நற்செய்தியை அறிவித் தார்கள். பலர் இரத்தச் சாட்சிகளாக மரித்தார்கள்.

புத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இறை பணியாட்கள் பல சமுதாயப் பணிகளைச் செய்ய முன் வந்தனர். குறிப்பாக மருத்துவப் பணி கல்விப்பணி, கவனிப்பாரற்ற குழந்தைகளுக்கும், அனாதைச் சிறார்களுக்கும், முதியோருக்கும் இல்லங்கள், கைவிடப்பட்ட பெண்களுக்கான மறு வாழ்வு இல்லங்கள் முதலியன அமைத்து விடுதலைப் – பணி செய்தார்கள். இது பல கிறிஸ்தவர் அல்லாதோருக்கு கிறிஸ்துவை எடுத்துக்காட்ட உதவியது.

## அறைகூவல் பணியின் அம்சங்கள்

நற்செய்தியை அறிவிப்பதும், விடுதலைப் பணியாற்றுவதும் இன்றியமையாத கடமைகள் என்றாலும் புனித பேசில் (St. Basil) கூறியதைப் போன்று விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாதது ஆகும்.

புனித பேசில் கூறியது –

"நீ பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உணவு
பசியாய் இருப்பவனுடையது,
நீ அடுக்கி வைத்திருக்கும் துணிகள்
ஆடையற்றவனுடையது"

"பகிர்ந்து கொள்ளாதது தவறு
பகிர்ந்து கொள்ளாதவன் திருடன்."

பகிர்ந்து கொள்ளாது, பகல் கொள்ளையடிப் போரை,
கல் நெஞ்சுள்ளோரை பார்த்து புனித பசில் கூறுகிறார்,
மக்களை விழிப்புணர்வடையத் தூண்டுகிறார்.

நற்செய்தியை அறிவித்து, விடுதலை வாழ்வு வழங்குவதோடு நின்று விடாமல், மேற்கண்ட விழிப்புணர்வை ஏற்படுத்தி வன்முறையற்ற அறப் போராட்டத்தில் ஈடுபடுவது கிறிஸ்தவர்களாகிய நமது கடமையாகும். எரே.1:10 வசனத்தின்படி நாட்டின் வன்முறை, அரசியலை ஒழிக்க ஊழல் நிறைந்த அமைப்புக்களை அழிக்க, வர்க்க சாதி பேதங்களை பிடுங்க சமய காழ்ப் புணர்ச்சிகளை இடிக்க இன்று ஆட்கள் தேவை. அதே நேரத்தில் அன்பை நிலைநாட்ட, அமைதியை உருவாக்க, சமுதாய ஒற்றுமையை வளர்க்க, மனித நேயத்தைக் கொண்டு உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், கட்டுண்டோருக்கு விடிவை தெரிவிக்கவும் ஆட்கள் தேவை.

இப்பணி – ஆண்டவரின் பணி, அறைகூவல் விடும் பணி, சமூகத்தால், சமயத்தால் வஞ்சிக்கப்பட்வர்களுக்கு வகை செய்யுங்கள், ஆறுதல் கூறுங்கள்; கனிமொழி கூறுங்கள் என்றார் ஆண்டவர். இந்தச் சிறியவர் களுக்கு எதை செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள் என்கிறார் ஆண்டவர். 'சிறியவர்களுக்கு' என்ற பதம் ஒடுக்கப்பட்டவர்கள், கட்டு ண்டவர்கள், உள்ளம் உடைந்தவர்கள் ஆகியோரை குறிக்கும். மேலும் ஆண்டவர் பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னி டத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவன் – என்கிறார் இயேசு.

ஆண்டவர் இயேசுவே இறைபணியாளர் – நற்செய்தியை அறிவிப்பவர் அவர் சொன்னதைச் செய்தார், செய்ததைச் சொன்னார். அவர் எங்களிடத்திலும் அதையே விரும்புகிறார்.

எமக்கு கொடுக்கப்பட்ட இந்த வாழ்விலே ஒரு பொருள் இருக்க வேண்டும். மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். ஆவியும் இருக்க வேண்டும், ஆனாலும் இருக்க வேண்டும் அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வு. அறைகூவல் விடுக்கும் ஆண்டவர் எம்மை அழைக்கின்றார், புறப்படுவோமா?

## உசாத்துணை நூல்கள்:


(1) தியாகு – விவிலியக் களஞ்சியம்

(2) – நம் நாட்டு சமயங்கள்

(3) S. J. SAMARTHA – ONE CHRIST, MANY RELIGIONS


## CHURCH UNITY

"The final and terrible difficulty is that Churches cannot Unite, Unless they are willing to die."

*- Bishop Stephen Neill – after the Inauguration of the Church of South India.*

# முதல் தமிழ் நாவலாசிரியர்: நீதியரசர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் - 175ஆம் ஆண்டு நினைவஞ்சலி

- சங்கீத வித்துவான் அருட்கவிஞர் வண. ம. கருணாகரன் -
(தமிழ்நாடு இறையியல் கல்லூரி - அரசடி, மதுரை)



கிறிஸ்தவ தமிழ் இலக்கிய வானில் சிறந்து விளங்கிய வித்தகரில் ஒருவராகிய வேதநாயகம்பிள்ளை அவர்கள் திருச்சிராப்பள்ளி மாநகரின் அருகில் அமைந்த குளத்தூர் என்ற சிற்றூரில் - 1826ம் திகதி, அக்டோபர் திங்கள் 11ம் நாள் பிறந்து, 1889வரை வாழ்ந்தார். கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர் வரிசையில் இவர் சிறந்த இடம் பெற்றுள்ளார். றோமன் கத்தோலிக்கச் சபையைச் சேர்ந்தவர்.

இவரில் சிறந்து விளங்கிய சமய சமரச மனப்பான்மையினால், பிற சமயத்தவரையும் தம்மவராகக் கருதும் சிறந்த பண்பு பெற்றிருந்தார், இவர் பெற்ற தமிழப் புலமையோடு, ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியும் கற்றிருந்த படியால், திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முதற்கண் - 1848இல் நீதிமன்ற ஆவணக்காப்பாளராய் நியமிக்கப்பட்டார். இவரின் சிறந்த பண்பையும் நுண்ணறிவையும் கண்டு - 1856இல் இவரை மாவட்ட நீதி அரசராக நியமித்தனர். 1857இல் தமிழகத்தில் முதல் இந்திய நீதியரசர் எனும் பெருமை இவரை அடைந்தது. இவர் பல இடங்களில் நீதியரசராகச் சிறந்த பணியாற்றிக் கோணாத நீதி வழங்கி, 1872இல் நிதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

வேதநாயகர் இயற்றமிழுக்கும், இசைத்தமிழுக்கும் ஆற்றிய சிறந்த புதுமைத் தொண்டு - இலக்கிய உலகில் இவருக்கு நிலையான புகழை ஈட்டித் தந்தது. தமிழ் உரைநடையைச் சீராக்கிவரும் அகராதி தந்த வீரமாமுனிவரும் - ஒப்பிலக்கண ஆய்வு முறை அமைத்த கால்டுவெல் ஐயரும் - ஆங்கிலத்தில் திருக்குறளை திருவாசகத்தை வடித்த போப்பையர் போன்ற மகான்கள் ஆற்றிய சிறந்த பணிகளைப் போன்று - வேதநாயகம்பிள்ளை அவர்களும் -

''நாவல்'' எனப்படும் புதினத்தை முதன் முதலாகத் தமிழில் ஆக்கிய சிறந்த பெருமையைப் பெற்றார்.

வேதநாயகரை நினைக்கும்போது – அவர் எழுதிய – ''பிரதாப முதலியார் சரித்திரம்'' என்னும் புதினமே நம் நினைவில் மிளிரும் – 'சுகுண சுந்தரி' என்ற அடுத்த புதினத்தோடு – பெண்மதிமாலை, பெண்கல்வி, பெண் மானம், நீதி நூல், சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் – சித்தாந்த சங்கிரகம், திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, சத்திய வேதக் கீர்த்தனைகள், வேதமாதா அந்தாதி, தேவ தோத்திரமாலை, பெரிய நாயகியம்மன் பதிகம் ஆகிய பல நூல்களை எழுதினார்.

இச்சிறு கட்டுரையில் வேதநாயகரின் நூல்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய இயலாது. ஆகவே, சில நூல்களை மட்டும் இங்கு குறிப்பிட்டு, அவரின் உளப்பாங்கைக் காணமுயல்வோம்.

## நீதி நூல்

திருக்குறளை முதலாகக் கொண்டு – நீதி நூல்கள் தமிழில் பல உண்டு, எனினும் பிற நூல்களிற் சிறிதளவு கூறப்பட்டும், கூறாமலும் விட்ட சில ஒழுக்க நெறிகளை இந்நூலில் வேதநாயகர் விளக்கிக் கூறுகிறார். இதனைப் பாராட்டுமுகமாய் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

''வள்ளுவர் ஆகியரேநல் நீதிநூல் உரைப்பதற்கு வல்லாரென்
துள்ளுவர் யாவரும், அனையது உண்மையாயினும்,
குளத்தூர்ச் சுகுண வள்ளல்
உள்ளுவர்பால் அருள் நிறுவும் வேதநாயகமகிபன் உரைத்த நீதி
தள்ளுவர் யார்? ஆதலின், தேற்றேகாரம் தவிர்த்து இசைத்தல் தகுதியாமே''
என்பதே

தெய்வம் உண்டென்ற நம்பிக்கையோடு நீதி நூல்களெல்லாம் அறம் வகுக்கின்றன. ஆயினும், இவ்வுலகிற்கு நாயகனாம் இறைவன் உண்டாவென்ற வினாவை எழுப்பி விடைகாண ஏனைய நீதி நூல்கள் முயலவில்லை, ஆனால் வேதநாயகர் தமது நீதி நூலில் இதற்கு விடை காண முயல்வதைக் கவனியுங்கள்,

"தீட்டுவோன் இன்றி ஆமோ சித்திரம் திகழ்பொற்பாவை
ஆட்டுவோன் இன்றித் தானே ஆகுமோ? திவவு யாழின்
மீட்டுவோன் இன்றிக் கீதம் விளையுமோ? சராசரங்கள்
நாட்டுவோன் ஒருவன இன்றி நன்கமைத்து ஒழுகுங் கொல்லோ?"

எனக் காட்டுகின்றார்.

மேலும் தெய்வ வழிபாட்டை வலியுறுத்தி, இதற்குப் பெருந்தடையாய் இருக்கும் பாவத்தை விலக்குவதற்கு ஓர் வழியைக் கூறி விளக்குவதைக் காண்க:

"இரவிலும் மற்றோர் பாரா இடையினும் பாவஞ் செய்வாய்;
கரதலா மலகம் போல்முக் காலமும் உணர்வோன் எங்கும்
தரமொடு வீற்றிருக்கும் தன்மைகளை எள்ளளவும் ஓராய்
பரன் இலா இடமொன்று உண்டேல், பலம் அவன் செய்நீ நெஞ்சே;"

மேலும் சமரச மனப்பான்மை உணர்த்துபவராய் கூறுவதைக் கவனியுங்கள்;

"அயலார் மதத்தைக் குணத்தைப் பழிக்கார்,
அறம் ஈது மறம் ஈது எனச் சொல்வர் பொதுவா,
சுய ஊதியந்தன்னை நட்டத்தை மதியார்,
சூழ்ந்தோர்கள் ஈடேறுமாறு என்றும் முயல்வார்,
இயல்செல்வர் மிடியாளர் நல்லார்கள் அலார் ஏன்
இப்பேதம் ஓரார், இயாவர்க்கும் இனியார்,
பயனொன்று விழைவோரை மறை தன்னில் எலார்
பழியற்ற மொழி பெற்ற வழியுற்ற மேலோர்" என வகுப்பதைக் காண்க.

வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு போன்ற நீதி நூல்களில் சுருக்கமாகக் கூறப்பட்ட குடும்ப உறவை – தாய் தந்தையரை வணங்கல், மக்களை வளர்த்தலும் படிப்பித்தலும், மாதரைப் படிப்பித்தல், உடன் பிறந்தார் இயல்பு, கணவன் மனைவியர் இயல்பு போன்ற விடயங்களை விரிந்த வட்டத்தில் அமைத்துக் காட்டியது இந் நூலிற் பிறிதொரு சிறப்பு.

பெண்மதிமாலை, பெண்மானம், பெண்கல்வி என்ற தமது நூல்களிற் பொதிந்து கிடந்த பொருளுக்கெல்லாம் வேதநாயகர் நீதி நூல் வடிவம் தந்து அமைத்த புதினம் "சுகுண சுந்தரி" எனலாம். இவற்றிலுள்ளதை சில எடுத்துக்காட்டுக்கள் மூலம் கவனிப்போம்.

**தந்தை தாயாரை வணங்கல்:**

"எப்புவிகளும் புரக்கும் ஈசனைத் துதிக்க வேண்டின்
'அப்பனே, தாயே' என்போம், அவரையே துதிக்க வேண்டின்
ஒப்பனை உளதோ? வேலை உலகிற்கட் புலனில் தோன்றும்
செப்பருந் தெய்வம் அன்னார் சேவடி போற்றாய் நெஞ்சே;"

மேலும், பெண்களைப் படிப்பிப்பதின் அவசியத்தையும் உடன் பிறந்தார் ஒன்றுபட்டு வாழ வேண்டியதின் அவசியத்தையும் சில பாடல்கள் வழியாக வலியுறுத்துகிறார்.

இக்காலத்திற் பெரிதாக பேசப்படும் உயர்ந்தோர் – தாழ்ந்தோர் முதலாளி – தொழிலாளி உறவும் அறமும் பற்றி வேதநாயகர் வேத நூல் அறிவு கொண்டு விரித்துரைக்கின்றார் – தொடர்ந்து, பொய்யும் களவும் கொலையும் அவை சார்ந்த குற்றங்களும் ஆசிரியரால் புதுமை விளக்கம் பெறுகின்றன – மது, சூது, கைக்கூலி போன்ற குற்றங்கள் – கல்வி அழகு செல்வம் பற்றிய செருக்கு – தீயரைச் சேராமை முதலாக விலங்கினத்துக்கு இடறல் செய்யாமை, ஈறாக அமைந்த அறச் சார்புகள் புதுக் கண்ணோட்டத்தில் விவரிக்கப்படுகின்றன.

மேலும் – பிழை பொறுத்தலின் தன்மையைப் பற்றி பின்வருமாறு விளக்குவதைக் காண்க;

"உனை ஒருவர் இகழ்ந்தனரேல், ஏதுக்கா இகழ்தனரென்று
உன்னி, உன்பால்
தினையளவு தப்பு உளதேல், அதை நீக்காய்; தப்பு இன்றேல்
சினம் உறாதே;
கனைகழைய வேம்பு எண்ணின், கழைக்கும் ஓர் குறை யுண்டோ?
கல்லின் மோதித்
தனை உடைய போர்க்கு உணவுதரும் தேங்காய் போல்
எவர்க்கும் நன்மை
தனைச் செய், நெஞ்சே;"

கிறிஸ்தவ வேதாந்த அடிப்படையாக விளங்கும் பத்துக் கட்டளைகளை ஒரு பாட்டின் அழகொழுக வடித்துத் தருகிறார்:

"ஈசனையே துதித்தல், அவன் திருநாமத் தொடு
திருநாளினைக் கொண்டாடல்

நேசம் ஆர் தனைதந்தை வணங்கல், கொலை
செய்யாமை, நிதம் கா மத்தை
நாசமாக்குதல், களவு பொய் நீக்கல், பிறன்
இல்மது நயந்திடாமை –
மாசறும் இவ் விதிபத்தும் வேதாந்தமெனக்
கடவுள் வகுத்திட்டானே''

வேதநாயகர் நீதி நூலை ஓரளவு நீளமாக எடுத்தாண்டதற்கு ஒரு காரணம் உண்டு. கதைகள், கட்டுரைகள், கவிதைகள், கீர்த்தனைகள், பக்திப் பாடல்கள், எனப் பல வகையாகப் பரந்து கிடந்த வேதநாயகர் நூல்களில் எல்லாம் இலை மறை காயாய் அமைந்து கிடந்த தத்துவ – வேதாந்த நீதிக் கருத்துக்களையெல்லாம் திரட்டித் தந்த கருவூலமே இந்நீதி நூல் என்க.

## இசைத்துறை தொண்டு:

இசையில் இயல்பாக ஈடுபாடு கொண்டிருந்த வேதநாயகர், தமது சமரச மனப்பாங்கிற்கு ஏற்ப – முதலில் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளும், பின், தமது சமயச் சார்பிற்கு ஏற்ப, சத்திய வேதக் கீர்த்தனைகளும் இயற்றினார். தெய்வத்திற்கு சிறப்புப் பெயரும் வரலாற்றுத் தொடரும் அமைத்துப் பாடாமல்–

''எக்காலமும் உன்றன பொற்கழல் பணிந்து கொண்டிருக்க நீ வரம்
அருள்வாய்'' என்றோ,

''ஈச, நின் பொற்பாத மலர் நம்பினேன் – என்னை இக்கணமே
வந்து ரட்சணஞ் செய்தருளே'' என்றோ

''ஏன் இன்னம் தாமதம், ஐயா, என்னிடம் வர ஏன் இன்னும் தாமதம் ஐயா?'' என்று பொதுப் பெயராற் சாடி சமரசம் பொருந்தி, சமய வேறுபாடின்றி யாவரும் இசைந்து பாட இடந்தருகிறது – நீதித் தொழிலோடு தொடர்புள்ள பாடல்களும் சமரசக் கீர்த்தனைகளில் இடம் பெறுகின்றன.

இவர் இயற்றிய சத்திய வேதக் கீர்த்தனைகள் அவர்தம் சமயச் சார்பும் அதனில் ஆழந்த அறிவும், அசையாத பற்றும், அமைந்த உருக்கமும் காட்டு கின்றன.

''பச்சைக் குழந்தை போல் படுத்திருந்தாலும் – உம்
பழமை நான் அறிவேன், ஐயா;
இச்சகமீதில் ஒன்றும் அறியேனாயினும் –
இனிய உமது பூர்வம் எல்லாம் அறிவேன், ஸ்வாமி;

**பக்திப் பாடல்கள்:**

இயேசு பெருமானின் திருவருளை வேதநாயகர் பணிவுடன் வேண்டி – நூறு பாடல்களை அந்தாதித் தொடையால் அமைத்தார். திருவருள் அந்தாதி – பக்தி வெள்ளம் நிறைந்த பாடல்கள் அடங்கியது. இதன் இனிமையை காட்ட ஒரு பாடலைக் கவனியுங்கள்:

> "பூவும் கடந்து, மனமும் கடந்து, புலன் கடந்து,
> கோவும் கடந்து, அண்ட கோடி கடந்து, குணம் கடந்து,
> யாவும் கடந்து அகண்டாகண்டா நினை எந்த வண்ணம்
> பாவும் கடந்த புகழ்த்தாய் உதரம் பரித்ததுவே;"

> "நாட்டிக் கிளைக்கும் புகமுடையோய், பண்டு நாடி உனைக்
> காட்டிக் கொடுத்தவன் யூதாசு அவன் கை கழுவி உனைச்
> சாட்டிக் கொடுத்தவன் போஞ்சு பிலாத்து அவன், சாமிஉனை
> ஆட்டிக் வதைத்தவர் யூதர் அலர், அடியேன்; நிசமே;"

1876 – 78 ஆண்டுகளில் (ஈசுர வருடம்) கொடிய பஞ்சம் ஏற்பட்டு மக்களை வாட்டியது. பட்டினிச் சாவுகள் ஏற்பட்டது. மென்மையான உள்ளம் கொண்ட வேதநாயகர் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு பதறினார். ஏழை எளிய மக்கள் படும் இன்னல்களைக் கண்டு கண்ணீர் விட்டார். மனம் வருந்திப் பணம் கொண்டு பல கஞ்சித் தொட்டிகளைக் கட்டி மக்களின் பசிப் பிணியைப் போக்கினார். மழையின்மையால் மக்கள் வாடி வதங்கினர். உணவுப் பற்றாக்குறையினால் பலர் வேர், இலை, தழை, கிழங்குகளை தின்று திரிந்தனர். இதனால் மக்கள் பல நோய்களுக்கு ஆளாகி, பாயும் படுக்கையும் ஆயினர். இது கண்டு வேதநாயகர் துடித்து பரமன்முன் மண்டியிட்டுப் பாரெல்லாம் கண்ணீர் சிதறப் பலத்த குரலில் பாடினார்.

**ஈசுவர வருடத்துப் பஞ்சத்தைப் பற்றிப் பாடியது:**

இராகம் : உசேனி

பஞ்சம் தீர் ஐயா – உன்னையன்றித்
தஞ்சம் ஆர் – ஐயா
தாரங்களையே புருஷர் கைவிட்டார்
தந்தை தாய் பிள்ளைகளை விலையிட்டார்
வேரும் இலையும் கிழங்கும் சாப்பிட்டார்
வெறுங்கையராய் வெளியே புறப்பட்டார்
வேலியும் அற்றார் – பெண்சாதிகள்

தாலியும் விற்றார் – வேலை செய்து
கூலியும் பற்றார் – பல பல
சோலிகள் உற்றார்
தோலும் எலும்புமாய்த் தோன்றியே சோம்பினார்
பாலருந்தாய் முலைப்பால் அற்றுத் தேம்பினார் – பஞ்சம்

வேதநாயகரின் இந்தத் தொண்டு, நடராச பெருமானைத் தவிர வேறு எவரையும் பாடாத கோபாலகிருஷ்ண பாரதியாரது,

"நீயே புருஷ மேலு – உலகில்
நிலைத்தது நின் பேரு – நீதிபதி" என்று
உளமார வேதநாயகரைப் பாடிப் புகழ்ந்தார்.

வேதநாயகம் பிள்ளையின் நீதி நேர்மையும் இலக்கியத் திறமும் சமரச மனப்பாங்கும் அறிந்த திருவாடுதுறை மேலசுரம் சுப்பிரமணிய தேசிகர் – அவரை நன்கு வரவேற்று உபசரித்தார். சமய சமரசத்திற்கு ஒருவர் தன் சமய அடிப்படைகளையும் வழிபாட்டு முறைகளையும் விட்டுக் கொடுக்கத் தேவை யில்லை. பிறசமயங்களை இழித்துப் பழிக்காமல், மனிதப் பண்போடு மதித்து, சகோதர உறவை வளர்த்துக் கொள்ளுதல் போதுமானது என்பது பிள்ளை அவர்களின் கருத்தாகும். இதன்படி ஒழுகின், சமய நெறி தழைக்கும் சமயப்போர் ஒழியும் – சன்மார்க்கம் நிலைக்கும் – என்கிறார் வேதநாயகர்.

பாவலர் வேதநாயகம் பிள்ளை சர்வசமய கீர்த்தனைகளில் சில
முதற்தரமான இசை அரங்குகளில் முதல் தரமான இசை வல்லுனரால்
பாடப் பெற்றது. வானொலி, தொலைக்காட்சியிலும் அவரது பாடல்கள் இன்றும் பாடப்பட்டு வருகிறது.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை பாடல்கள் இசை இலங்கை கிறிஸ்தவ இறை யியல் கல்லூரி வளாகத்தில் – கத்தோலிக்க உரும்பிராய் சபையைச் சேர்ந்த அருள்தந்தை கி. ஜே. அந்தோனிபால, அவர்களுக்கு 5 பாடல்கள் ஒலி நாடாவில் பதிவு செய்து கொடுக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்த்துயர்த்திய முதல் நீதியரசர் வேதநாயகப் பாவலர் அவர்களின் வாழ்க்கைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இவ்வாண்டு 11.10.2001ல் மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் பிறந்த 175ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடி, அவருடைய படைப்புக்களை பிறர் அறியப் பரப்பி இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக.

# பல்கலைக்கழக ஆன்மீகப் பணியகம் ஏன்? ஏதற்காக? எந்த அடிப்படையில்?

- M. யூட் சுதர்சன் -

இது மூன்றாம் நிலையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களில் நடைமுறைப் படுத்தப்படும் சபை சாரா திருப்பணி விடையின் ஓர் வடிவமாகும் (A form of extra-parochial ministry). உயர்கல்வி தொடர்பாக வெளிவந்த இராபின்ஸ் அறிக்கையை தொடர்ந்து (Higher Education, report of Committee under the Chairmanship of Lord Robbins 1961-63) உயர்கல்வி நிறுவனங்களில் ஆன்மீகப் பணியகங்கள் **1960**களில் வேகமாக ஆரம்பிக்கவும், வளரவும் தொடங்கின. இதன் அமைப்பிலும் வடிவத்திலும் வித்தியாசங்கள் பல காணப்பட்ட போதிலும், எல்லா உயர்கல்வி நிறுவனங்களின் ஆன்மீக பணியகங்களினாலும் சில குறிப்பிட்ட பொதுவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சில முக்கியமான இறையியல் விடயங்களும் மேலாண்மை பெற்றன.

## ஆன்மீகப் பணியகத்தின் வடிவங்கள்

ஒரு சில கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தமக்கு தாமே ஆன்ம குருக்களை நியமித்து, அப்பணிக்குத் தேவையான மூலவளங்களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துமுள்ளனர். சில நிறுவனங்கள் வெளிப்படையாகவும், தமது அடிப்படையிலேயும் சமயம் சாராதவை (Secular) ஆக விருப்பதனால், அவை ஆன்மீகப் பணிக்கு ஊக்கமளிப்பதில்லை. ஆனால் பெரும்பான்மையான நிறுவனங்கள் தமக்கென ஒவ்வொரு சபை களும் ஆன்ம குருக்களை நியமிக்கும் போது அவற்றை அனுமதிப்பதுடன் ஊக்கமளிக்கின்றன.

- குறிப்பிட்ட சபைகளை பிரதிநிதிப்படுத்தி அச்சபைகளால் நியமிக்கப் படும் ஆன்ம குருக்கள் தமது சொந்த சபைகளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டில் திருப்பணி சார்ந்த கரிசனை (Pastoral Care) காட்டுவது என்ற வகையிலேயே நியமிக்கப்படுகின்றனர். ஆயினும் பலவேளைகளிலும்

ஏனைய சபைகளைச் சேர்ந்த ஆன்ம குருக்களுடனும் மாணவர்களுட னும் சேர்ந்து ஒருங்கிணைந்த செயற்பாடுகளிலும் பங்குபெறுகின்றனர்.

✣ உயர்கல்வி நிறுவனங்களினாலேயே தமக்கென நியமிக்கப்படும் ஆன்ம குருக்கள், தமது பணியில் சமய, இன அல்லது வேறு எவ்வித வேறுபாடு களையும் பொருட்படுத்தாது, முழு நிறுவனத்திற்கும் ஆன்ம குருக்க ளாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். இவ்வகையான ஆன்மீகப் பணியகம், நிறுவனத்தின் எந்தவோர் விடயங்களிலும் அருகிலிருக்கவும், நேரடியாக ஈடுபடவும் நிறுவனத்துடன் தம்மை அடை யாளப்படுத்திக் கொள்ளவும் ஆன்ம குருவை அனுமதிக்க முடியும்.

## ஆன்மீகப் பணியகத்தின் செயற்பாடுகள்

பெரும்பான்மையான பல்கலைக்கழக ஆன்மீகப் பணியகங்கள் முன்னெடுக் கும் சில பொதுவான செயற்பாடுகளாவன,

01. வழிபாடு நடாத்துதல்: ஆன்மீகப் பணியகங்கள் குறிப்பிட்ட ஒரு சபை ஒழுங்கமைப்பினுள் கிரமமாக வழிபாடு இயற்றி பழகிப் போன மாணவர் களுக்கு சாதாரண வழிபாட்டு ஒழுங்கிலேயே நடாத்துகின்றன. அமைதி, நாடகம், இசை போன்றவற்றை உள்ளடக்கிய வழிபாட்டுப் பரிசோதனை வடிவங்களும் ஒருமைப்பாட்டு முயற்சிகளாக முன்னெடுக் கப்படுகின்றன. எங்கு நிறுவனங்கள் தமக்கென ஆன்ம குருக்களை கொண்டுள்ளனவோ, அங்கு அந்நிறுவனத்திற்குரிய அடையாளங்கள், பாரம்பரிய குறியீடுகளை உபயோகித்து வழமையான பல்கலைக்கழகத் திற்குரிய வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

02. ஆற்றுப்பணி: ஆன்மகுருக்கள் குறித்து 'இவர்கள் நிறுவனங்களுள் உள்ள நடுவு நிலையாளர்கள்' என மாணவர்கள் கருதுகின்றனர். தமது தனிப்பட்ட பிரச்சனைகளின் பல இரகசிய விடயங்களை இவரிடம் பயமின்றி கூறலாம் என நம்புகின்றனர். இவ்வகையில் இளமைப்பருவம் தொடர்பான பிரச்சனைகள் பாலியல் பாலின வளர்ச்சி, ஆதங்கங்கள் வேறு சில பிறழ்வு நடத்தைகள் போன்றன ஆன்ம குருவிடம் கொணரப் படலாம். எனவே இவற்றில் குறிப்பிடத்தக்க விடயங்களுக்கென பயிற்றப்பட்ட ஆற்றுப் பணியாளரிடம் வழிநடாத்துதல், அவ்வகை உதவிகள் எங்கே பெறப்படலாம் என ஆலோசனை வழங்குதல் என்பன வற்றாலும் இச்செயல்பாடு பாரிய முக்கயத்துவத்தைப் பெற்றுள்ளது.

03. இறையியல், கலாச்சார, சமூகம் பற்றிய படிப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்துதல்: ஆன்மீகப் பணியகத்தின் செயற்றிட்டங்கள் பலவேளை களிலும் வேறுவிதமான ஒரே தன்மையுடைத்த கலாசாரத்தினுள்ளேயே

மாற்று நோக்குகளை முன் வைக்கின்றன. சில நிகழ்ச்சிகளை கல்வி நிறுவனத்தின் பாடவிதான ஒழுங்குக்குள் மட்டுப்படுத்தாமல் வெளியேயுள்ள ஆய்வுப் பரப்புகளை (அவற்றை பாடவிதானத்துடன் தொடர்புபடுத்தியும்) அறிமுகம் செய்யலாம். உதாரணமாக, விஞ்ஞானமும் இறையியலும், மருத்துவமும் அறவியலும், சமயங்களும் மனித உரிமைகளும் முதலியன.

04. மாணவ, ஆசிரிய அமைப்புகளுடனான ஈடுபாடு: ஆன்ம குருக்கள் தாம் தாம் பணியாற்றும் நிறுவனங்களில் செயல்படும் அமைப்புகளுடன் நேரடியான பங்கு பற்றுதலை தேடிப்பெறுவது பல வேளைகளிலும் அவசியமானது. இவ்வகையான பங்கு பற்றுதல் 'தொழில் சார்ந்ததாக' இருக்கலாம். (உ-ம் ஓர் நலன் விரும்பிகள் குழுவில் பணியாற்றுதல்) அல்லது 'தனிப்பட்டதாக' இருக்கலாம் (உ-ம் ஏனையவர்களது நியாயமான செயல்பாடுகள், போராட்டங்களில் ஆன்மகுரு தனது ஆர்வத்தை காண்பிக்கும் அடிப்படையில் எழும் உணர்வினால் பங்கு பற்ற உந்தப்படுதல்) பல்கலைக்கழக ஆன்மகுருக்கள் தமது சொந்த நிகழ்ச்சி நிரலினுள் அமிழ்ந்து போவது மற்றும் தமது சொந்த கட்டிடத்தினுள்ளேயே தனிமைப்படுவது போன்றவற்றிற்கும், தமது கல்வி நிறுவத்தின் முழு செயல்பாடுகளிலும் பங்கு பற்றுவதற்கும் இடையே ஓர் சமநிலையை பேண வேண்டும். எவ்வாறெனினும், இரண்டும் ஆன்ம குருக்களினால் பொறுப்புணவுடனும், கடமையுணர்வுடனுடனும் கவனிக்கப்பட வேண்டியவையகும்.

## மேலெழும் முக்கியமான இறையியல் அம்சங்கள்

பல்வேறு வகைப்பட்ட – ஒருமைப்பாட்டு, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் போன்ற – மாற்றமடையும் சூழ்நிலைகளிற்குள்ளேயே ஒவ்வொரு ஆன்மீகப் பணியகங்களும் எழுந்தன. எனவே, திருச்சபையின் கோட்பாடுகளை, நற்செய்திப் பணியின் சாதனங்களை / அடையாளங்களை, இறையியல் பிரதிபலிப்புகளை பொதுவில் பரிசோதனைக்குட்படுத்தும் ஆய்வு கூடங்களாகவும் இவை ஆகின்றன. இறையியல் பிரதிபலிப்புக்கான சில குறிப்பிடக் கூடிய விடயங்களென பின்வருவனவற்றை அடையாளம் காணலாம்.

### (1) கிறிஸ்தவ பிரசன்னம்:

கிறிஸ்துவின் பெயரினுள் தொடர்ந்து பிரசன்னமாயிருக்க வேண்டுமெனில், சமூகத்திலும், கிறிஸ்தவ குழுமத்திற்குள்ளும் நமக்கு இதுகாறும் இருந்த நிலையில் நின்று நாம் சாக வேண்டும். இயேசுவில் காண்பதைப் போன்று இயல்பான மனிதத் தன்மையை மீள அமைப்

பதற்காக வேலை செய்வதும் அச்செயலுக்கான ஆதாரங்களை அறிக்கையிடுவதிலும் நாம் சோம்பலாகி விடக்கூடாது. 'வளர்ந்து வரும் உயர்கல்வி சார் சமூகங்களுக்கு உலக மாணவர் கிறிஸ்தவ சம்மேளனத்தின் அணுகுமுறையை இவ்வசனங்கள் கொடுக்கின்றன. (World Student Christian Federation, 1965) இச்சமூகங்கள் தம்மிடையே கிறிஸ்தவ பிரசன்னத்தை வளர்க்க பின்வரும் 5 முக்கிய பண்புகளை கவனத்திலெடுக்க வேண்டியுள்ளது.

- திறந்த நிலை: சமயம் சாரா உலகின் பன்மைத்தன்மையை திறந்த மனநிலையுடன் சந்தித்தல்.
- பல்வகைமை: மனிதத்தன்மையற்ற விடயங்களுக்கு முகம் கொடுப்பதில் பல்வகைப்பட்ட அணுகுமுறைகளுக்கு வசதி செய்தல்.
- ஒருமைப்பாடு: இன்றைய உலகின் கிறிஸ்தவ சமூகத்தினுள் காணப்படும் தத்தமது சபைப் பிரிவு பற்றிய மேலாதிக்க சிந்தனைகளுக்கு மறுப்புக்கூறுதல்
- பரிசோதனைகள்: உலகில் கிறிஸ்துவின் பிரசன்னம் எவ்வகைப் பட்டதெனப் புரிந்துணர புதிய முயற்சிகள்
- சபைகளுடனான புரிந்துணர்வு: பல்கலைக்கழக ஆன்மீகப் பணியகங்களும், அதன் மாணவர் குழுக்களும் திருச்சபைகளின் முழுமையான வாழ்விலும், தூதுப் பணியிலும் பங்குள்ளவர்கள் என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

## (2) சமயம் சாராதவையும், சமயம் சார்வனவும்

இது ஓர் தவறான பாகுபாடு 'கிறிஸ்தவ பிரசன்னம்' எனும் மகுட வாக்கை தமதாக்கிக் கொண்ட பல ஆன்மீகப் பணியகங்கள், சமயம் சாரா உலகில் கடவுளின் பிரசன்னத்தையும், செயல்பாட்டையும் கண்டு கொள்ளும் ஆழமான புரிந்துணர்வுக்குள் வழிநடத்தப்பட்டுள்ளன. உலகம் வரைகின்ற நிகழ்ச்சி நிரல் இன்று ஒரு மாறாத சுலோகமாக ஆகியுள்ளது. அது இனம், வறுமை, பாகுபாடு பற்றிய உடனடி விடயங்களையே எப்பொழுதும் சுட்டிக்காட்டுகின்றது. ஆனாலும் அது சமயம் அற்ற அல்லது சமயம் சாராதவை எனத் தீர்ப்பிடப்பட்ட வாழ்வின் எல்லைகளினுள்ளும் கடவுளின் திருவுளம் கேட்கப்படக் கூடியது / அறிந்து கொள்ளக் கூடியது என்ற ஆழமான விசுவாசத்தை (வெளிப்படையாக கூறாவிட்டாலும்) உள்ளுறைவாகக் கொண்டுள்ளது. எனவே, சமயம் சார்ந்த அல்லது சமயம் சாரா நோக்கின் தனித்துவமான பார்வை

ஆனது; எந்தவோர் பரஸ்பர உறவிலும் அசாத்தியமான நிலையிலுள்ள சமயம் / சமயஞ்சாராதவை எனும் இருபகுதிக்கும் இடையேயுள்ள நிலையான, அசையாத வரையறைகளுக்கெல்லாம் மேம்பட்டது எனலாம். எனவே இத்தகைய பாகுபாட்டை இல்லாதொழிக்கவும், பரஸ்பர கருத்துக்களை, செயல்களை முன்னெடுக்கவும், ஆன்மீகப் பணியகங்கள் கல்வி சமூகங்களிடையே முழுமையாக பிரசன்னமாயிருக்க விழைந்துள்ளன.

## முடிவாக

பல்கலைக்கழக ஆன்மீகப் பணியகங்கள், வழமையான சபைப்பணிகளை விட மேலதிகமானவை. வழிபாட்டியலுக்கான பரிசோதனைக் கூடங்களாகவும், பல்வகை சமய, இன, கலாசார மாணவர்களின் ஆன்மீக வழிகாட்டிகளாகவும் ஆற்றுப்படுத்துபவர்களாகவும் அமைகின்றன. பல்கலைக்கழக மாணவர் / ஆசிரியர் குழுமங்களின் நீதியான செயல்பாடுகளுக்கு தார்மீக ஆதரவை வழங்கும் கடப்பாட்டையும் கொண்டுள்ளன. எம் சமூகத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தனித்துவத்தில் நுழையாமலேயே இந்நிறுவனங்களின் செயல்பாடுகளை சிறப்பாகவும் நீதியானவும் பூரணப்படுத்தும் பணியில், பல்கலைக்கழக ஆன்மீகப் பணியகங்கள் உதவிடல் வேண்டும்.

## உதவிய நூல்கள்:


(1) : **Student world,** No 3, WSCF Publication 1965.

(2) Dyson. A. O : **The Language of the Church – 1976 in higher and further. – Education**

(3) Jenkins. D : **The British: Their Identity and religion** – SCM press, 1975

(4) Scott Tom : **College / University Chaplaincy,** New York, 1987.

# திருச்சபையில் இன்று காணப்பட வேண்டிய விழுமியங்கள்



- அருள்திரு. பென்ஜமின் ஜெயராஜா-

திருச்சபையானது விசுவாசிகளின் பரந்துபட்ட ஒரு குழுமமாகக் கருதப்படுகின்றது. இது இறைவெளிப் பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளதால் இவ் வமைப்பானது உலக அமைப்புகளிலிருந்து வேறு பட்டதாக உள்ளது. இது இறைவனின் பிரசன்னத்தி னால் நிறைந்துள்ள ஓர் அங்கமாகக் கருதப்படுகின்றது. இதன் நிமித்தமாக அருள் வரங்கள் நிரம்பியதாகவும் தூய ஆவியாரின் அருட் கொடையாகவும் திருச்சபை காணப்படும். இது கிறிஸ்துவின் மீட்புப் பணியை வெளிப்படுத் தும் அடையாளமான அமைப்பாகும். இதன் தலைவராகக் கிறிஸ்துவும், உடன் அவயவங்களாக இருந்தும் செயற்பட வேண்டியவர்களாக இதன் அங்கத்தவர்களும் இருக்க வேண்டும். எனவே இதன் அங்கத்தவர்கள் இறைவன் மீது பற்றுதியுள்ளவர்களாகவும் அன்பினால் நிறைந்தவர்களாக வும் இருந்து, இறைவனுடன் தனித்துவமான உறவையும் கொண்டுள்ளதான அமைப்பாகவும் இருத்தல் அவசியம். திருமறை திருச்சபையை கிறிஸ்து வின் மணவாட்டியாகக் குறிப்பிடுகின்றது. இதன் ஆரம்பம் ஆபிரகாமின் அழைத்தலில் இருந்தே உள்ளதாக கருதுவது பழைய, புதிய ஒப்பந்தங் களுக்கு ஏற்புடையதான நிலையாகும்.

இத்தகைய அமைப்பானது பலவீனமும் பாவ நாட்டமும் உள்ள மனிதர்களைக் கொண்டதாக இருக்கின்றது. இதன் காரணமாக திருச்சபையானது அதன் உன்னத நோக்கத்திலிருந்து தவறிய நிலையிலேயே காணப்படுகின்றது. இந் நிலையை ஆரம்பத்திலிருந்தே அவதானிக்க முடிகின்றது. எனவே ஒழுங்கு கட்டுப்பாடு நிலை நாட்டப்பட வேண்டிய அவசியமும் நேரிடு கின்றது. இதற்காக சட்டங்களை உருவாக்கி திருச்சபையை கட்டுப்பாடுள்ள அமைப்பாக்க முயற்சிகளை புதிய ஒப்பந்தத்தின் நிருபங்களில் அவ

தானிக்க முடிகின்றது. இதன் காரணமாக திருச்சபை ஒழுக்கத்தை அள விடும் அல்லது நிலை நாட்டும் அமைப்பாகவுள்ளது. திருச்சபை உலகளாவிய அமைப்பாக இருப்பதனால் பல்வகையான மனித சமுதாய நலனையும் கருத்திற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்குரிய செயற்பாட்டு வடிவங்களை அமைத்து காலத்துக்கு காலம் அவைகளை மாற்றியமைக்கின்றன. இவ்வாறு மாற்றி அமைக்கும் வேளைகளில் அவை கிறிஸ்துவின் வழியிலும் வாழ்விலும் ஏற்புடையதாக இருக்கும் வண்ண மாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று திருச்சபைகளை நோக்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது. தமக்குள்ள தனித்துவத்தைப் பேணுவதற்காக போட்டி மனப்பான்மையை வளர்க்கும் நிலை உள்ளது. இதனிமித்தமாக மற்றவர்களை நியாயம் தீர்க்கும் போக்கு மிக அதிகமாக இருக்கின்றது. இறைவனின் நியாயத் தீர்ப்பை முன்னிலைப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய திருச் சபை இன்று முன் மாதிரியாகவே இல்லை. இப்படியாக இருக்கும் நிலையில் கிறிஸ்துவின் இரட்சிப்பின் நற்செய்தியை எவ்வாறு அறிவிக்க முடியும்.

கிறிஸ்துவின் சீடன் என்பது பற்றுறுதி என்னும் கொடையை பிறருடன் பகிர்ந்தளிக்கும் அடியான் ஆகும். திருச்சபை முன் மாதிரியாக இல்லாத போது போராயர் முதற்கொண்டு சாதாரண அங்கத்தினர் வரை திறமை யாகத் செயற்பட முடியுமா? இன்று கிறிஸ்தவ நாடுகள் எனத் தம்மை முன்னிலைப்படுத்தும் நாடுகள்தான் உலக மயமாக்கல் மூலம் மூன்றாம் உலக நாடுகளை கடுமையாகச் சுரண்டுகின்றன. இந் நிலையைத் தெளி வாகக் கண்டுணர்ந்து கொண்டு ஒன்றுமே தெரியாதவர் போல் திருச் சபைகளும் அதன் செயற்பாட்டுறுப்பினர்களும் பேசாதிருப்பதேன்? பிறர் நலன் பேண வேண்டிய திருச்சபை இப்படியான செயல்பாடுகளினால் நிறைந்திருப்பதினால் தூய மணவாட்டியாக இருக்க முடியுமா?

சாதாரண மனித இன வாலிபன் தனக்கு வரவிருக்கும் மணவாட்டியை நல்ல நிலையில் இருப்பதையே விரும்புவான். இரண்டாம்வருகையின் போது தனது செயற்பாடுகளினால் நல்ல மணவாட்டியாக இருக்கும் திருச்சபை யையே கிறிஸ்து எதிர்பார்ப்பார். அப்படியாக இல்லாதுவிடின் நியாயத் தீர்ப்பின் போது கடும் கோபக்கினையைத்தான் சந்திக்க நேரிடும். எனவே தமக்கு ஏற்புடையதான சட்டங்களை வைத்திராமல் பொது நலன் பேணும் அங்கமாகத் திருச்சபை செயல்புரிய வேண்டும். இன்றே விழித்தெழுந்து செயல்படட்டும். திருச்சபை வளர்க்கட்டும் புதிய இறையரசுக்கான விழுமியங்களை.

# இறைவன் தந்த திருச்சபை நாயகன்

- *வண. வீ. ந. தர்மகுலசிங்கம்* -

ஒரு மதத்தின் அடித்தளமாக விளங்குவது திருமறை. மதங்கள் பல, அது போலவே திருமறைகளும் பல. ஒவ்வொரு மதமும் தத்தம் திருமறை பற்றி, அதன் தோற்றம் பற்றி வெவ்வேறாக விவரிக்கின்றது. இவற்றினுள் திருவிவிலியம் அல்லது பரிசுத்த வேதாகமம் தனித்துவமானது. கடவுளின் வெளிப்பாடு வரலாறாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஒருவன் தன் தந்தையின் உணர்வினையும், சிந்தையையும் எவ்வாறு அறிந்து கொள்ளுகிறானோ, அப்படியே கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு தந்தை மைந்தன் உறவாக வெளிப்படுத்தப்படுகின்றது. பிதாவாகிய இறைவனின் நோக்கம் – அவரது அனைத்துப் படைப்பின் மூலமும், அதில் மகுடப் படைப்பாக மனிதன் படைக்கப்பட்டு – படைப்புக்களைச் சுயாதீனமாக ஆண்டு கொள்ள சுதந்திரம் கொடுக்கப்பட்டதினால் அந்த உறவு விளங்குகின்றது. தந்தையுடன் மைந்தன் மகிழ்ந்திருப்பது அவர்களிடையே இருக்கும் அன்பின் உறவினை வெளிப்படுத்துகின்றது. அது சுதந்திர உணர்வாக மனிதனில் வெளிப்படும். அந்த சுதந்திரம் – அன்பின் உறவில் நிலைத்திருக்கும் போது உணரப்படும் ஒன்று. இந்த சுதந்திரம் மனிதனை விட்டு விலகிப் போகும் போது, அன்புக்குப் பதிலாகப் பாவம் புகுந்து விடுகின்றது. கடவுளின் படைப்பின் வரலாற்றை வெளிப்படுத்திய திருமறை மனிதனுள் பாவம் புகுந்த வரலாற்றையும் தருகின்றது. ஆதி மனிதனிடமே பாவம் புகுந்துவிட்டது என்றும், கீழ்ப்படியாமையே அதற்குக் காரணம் என்றும், தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

மனிதனுள் பாவம் புகுந்தபோதிலும் கடவுளுடைய அன்பு மறுக்கப்படவில்லை. மனித சுதந்திரம் பறிக்கப்படவுமில்லை. அவன் சுதந்திரமாகவே நன்மை, தீமையை அறிந்து கொள்ள வேண்டும் என்பது பிதாவாகிய இறைவனின் திட்டம். திருமறை அடிப்படையாகவே வலியுறுத்தும் செய்தி – கடவுளுடன் சார்ந்து வாழ்ந்தால், ஆசீர்வாதம், மறைந்து வாழ்ந்தால் சாபம், மனிதன் தீமையில் விழுந்தபோது – உடன்படிக்கை பண்ணும் கடவுளாகத் தன்னை வெளிப்படுத்தினார். ஒரு சந்ததியைத் தெரிந்து அவர்களூடாகத்

தம்மை வெளிப்படுத்தினார். ஒரு சந்ததியினைத் தெரிந்து கொண்டார் என்பது வரலாற்று ரூபமாக திருமறையில் வெளிப்படுத்தப்படுகின்றது. எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் மக்கள்–மோசே மூலமாக மீட்டு வழி நடத்தப்பட்டமை – வரலாறு தரும் உண்மை. அத்துடன் பத்துக் கற்பனைகளை உடன்படிக்கைப் பொருளாக கொடுத்து – உறவுப் பாலத்தை தொடர்புபடுத்தினார். ஆனால் இந்த உடன்படிக்கை மீறப்பட்டு – தெரிந்து கொள்ளப்பட்ட இந்த சந்ததி இரு கூறானது. இதனால் மீண்டும் அடிமைத் தனம் என்னும் சாபம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. மனுக்குலம் மீட்பை வேண்டி–வானத்தைப் பார்த்து நின்றது.

அப்போது வார்த்தையாலும், உடன்படிக்கையினாலும் வெளிப்படுத்தின பிதா வாகிய இறைவன் – மனித வடிவில் மைந்தனாக வந்தார். கன்னிமரியின் மடியினில் தவழ்ந்தார். மைந்தர்களாக வாழ வேண்டிய மனுக்குலம், எப்படி வாழ வேண்டும் என்பதனை மைந்தனாக மனித உருவில் தம்மை வெளிப் படுத்தினார். இதனால் பிதாவின் சித்தம் மைந்தனில் எப்படி விளங்க வேண்டும் என்பதற்கு அவர் மாதிரியானார். பணியின் முதல் அறை கூவலாக மனந்திரும்புங்கள் தேவனுடைய இராச்சியம் சமீபமாயிருக்கிறது என்றார். இறையரசை நிறுவி அனைத்து மனுக்குலமும் இறைமக்களாக வாழ வழிவகுத்தார். இறையரசுக்கான வாழ்வினை உவமைகளினூடாகப் போதித்து விளக்கினார். பிதாவாகிய இறைவனுககும், குமாரனாகிய கிறிஸ்துவுக்கும் மனுக்குலத்திற்கும் உள்ள தொடர்பினை திராட்சைத் தோட்ட உவமைமூலம் அற்புதமாக விளக்குகிறார். பிதாவை தோட்டக் காரனாகவும், தன்னை திராட்சை செடியாகவும், அதன் கிளைகளாக மனுக் குலமும் விளங்க வேண்டும் என்று விளக்குகிறார். இது பரிசுத்த வேதாகமம் தரும் அற்புதமான செய்தி. இறைமகனாக வந்த இயேசு கிறிஸ்து தனது சரீரத்திலும், இரத்தத்திலும் உடன்பாடு பண்ணுவதன் மூலம் அனைவரையும் இறைமக்களாகக் காண திருச்சித்தம் கொண்டார். இறையரசுக்குள் வாழ்வதே மீட்பின் வாழ்வு. இது மனந்திரும்புதலினால் கிடைக்கும் வாழ்வு. மனந்திரும்புதல் என்பது, பழையவைகளை களைந்து, புதியவைகளைத் தெரிந்து கொள்வதாகும். கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் மனந்திரும்புதலினால் ஏற்படும் மீட்பின் வாழ்வினை விளக்குகின்றது.

இந்த வாழ்வினை அனைத்து மனுக்குலமும் காண வழிவகுக்கும் பணி யினை அப்போஸ்தலர்களினூடாக திருச்சபைக்குக் கொடுத்தார். திருச்சபை பேதுருவின் தலைமையில் நிறுவப்பட்டதாகப் பார்க்கின்றோம். உண்மை யாகவே நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து எனும் பேதுருவின் உண்மையான விசுவாசத்தில் திருச்சபை கட்டப்பட்டது. எனவே, திருமறை

வெளிப்படுத்தும் மெசியாவும், திருச்சபையின் நாயகனும் கிறிஸ்துவே. பிதாவை ஒருவனும் ஒருபோதும் கண்டதில்லை என்று கூறிய கிறிஸ்து – நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை அறிவீர்களா? என்றார். இதன் மூலம் ஆதியில் அனைத்தையும் படைத்தவரும், புதிய படைப்பாளரும், இறையரசின் இராஜாவாக விளங்குபவரும் கிறிஸ்துவே. சரீர மரணத்துடன் வாழ்வு முடிவது இல்லை என்றும் இறையரசில் வாழும் வாழ்வு நித்தியமானது என்றும், வாழ்வினை அர்த்தமுள்ளதாக்கியிருக்கின்றார். அவரது உயிர்த் தெழுதல் அதனைத் தெளிவுபடுத்துகின்றது.

எனவே இறைவன் தந்த திருச்சபை நாயகனாம் கிறிஸ்துவை – அவர் காட்டிய நெறியில் வாழந்து, நாம் வாழும் இவ்வுலகத்தை இறையரசுக்குள் காண வாரீர்!


# வாழ்த்துகின்றோம்

**இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான - "பாதுகாவலன்" - 125ஆம் ஆண்டு நிறைவெய்தியதை அறிந்து - மகிழ்வுடன் வாழி! வாழி!! என உளமார வாழ்த்துகின்றோம்!!!**

**இறையருளும் ஆசியும் உங்கள்மேல் தொடர்ந்து பொழிந்தருள வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.**

*கிறிஸ்தவ இறையியல் கல்லூரி*
*சுன்னாகம்*

# குழந்தை இயேசு

*- சகோ. டீ. எஸ். சொலமன் -*

''இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்''

குழந்தை இயேசுவின் பிறப்பின்போது கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே வயல்வெளியில் தங்கி மந்தையைக் காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு கொடுத்த நற்செய்தி இதுவே!

இவ்வாறுதான் அன்று உரோமப் பேரரசிலும், உரோமப் பேரரசனுக்குப் பிறந்திருக்கும் வாரிசைக் குறித்து – சீஸர் – அரச மாளிகைக்கு முன் குழுமி நிற்கும் மக்களுக்கு உரோமத் தூதுவன் அறிவிப்பை விடுத்தான். ''இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் இன்று . . . (ஜுலியஸ்) சீஸர் எனும் இரட்சகர் உங்களுக்காக இவ் அரண்மனையில் பிறந்துள்ளார்'' ''இதுவே உங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகும்'' என்பதே.

ஆனால் குழந்தை இயேசுவின் பிறப்பின்போது கூறப்பட்ட செய்திக்கும் உரோமப் பேரரசின் வாரிசாகப் பிறந்திருக்கும் குழந்தைக்காக கூறப்பட்ட செய்திக்குமிடையே பல வேறுபாடுகள் உண்டு.

குழந்தை இயேசுவின் பிறப்பின் போது மேய்ப்பர்களுக்கு கூறப்பட்ட செய்தி உழைக்கும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட நற்செய்தி. உரோம அரசர் சீஸர் பிறப்பின் போது அறிவிக்கப்பட்ட செய்தி உழைப்பை உறிஞ்சும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட நற்செய்தி.

குழந்தை இயேசுவின் பிறப்பின்போது கொடுக்கப்பட்ட செய்தி அதிகார வர்க்கத்திற்கு பேரிடி. உரோம சீஸரின் பிறப்பின்போது அறிவிக்கப்பட்ட செய்தி அடக்குமறைக்குட்படுத்தப்பட்ட மக்களுக்கு பேரிடி.

குழந்தை இயேசுவின் பிறப்பின்போது கூறப்பட்ட செய்தி கடவுளுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டு பண்ணுவதற்காக அறிவிக்கப்பட்ட செய்தி. ஆனால் உரோம சீஸரின் பிறப்பின் போது அறிவிக்கப்பட்ட செய்தி சீஸரே கடவுள். அவரே தொழுது கொள்ளப்படத்தக்கவர், சீஸரே அனைத்து ஆளுகையையும் நடப்பிப்பவர் எனும் ஆவணத்திற்காக அறிவிக்கப்பட்ட செய்தி.

குழந்தை இயேசுவின் பிறப்பின்போது அறிவிக்கப்பட்ட செய்தி அனைத்துலக மனுக்குலத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி. ஆனால் உரோம சீஸரின் பிறப்பின்போது அறிவிக்கப்பட்ட செய்தி ஒரு சில மாந்தருக்கு மட்டும் சந்தோஷத்தை உண்டாக்கும் செய்தி.

இவ்வாறு குழந்தை இயேசுவின் பிறப்பின் செய்திக்கும், உரோமப் பேரரசனின் பிறப்பின் செய்திக்குமிடையே பலவேறுபாடுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எனினும், இன்று குழந்தை இயேசவின் பிறப்பின் செய்தி எமக்கு எதனை உணர்த்துகின்றது? உண்மையாகவே குழந்தை இயேசு எம் உள்ளத்திலும் குழந்தையாகவே பிறந்துள்ளாரா?

குழந்தைகளிடையே காணப்படும் மிகப் பெரிய பண்பு பெரியவர்களிடையே தங்கியிருக்கும் தன்மையாகும். பசி, பயம். சோர்வு, களைப்பு என எத்தகைய தேவை ஏற்படினும் ஒரு குழந்தை பெரியவரில் தனது தாய், தந்தையரில் தங்கியிருக்கும் பண்பினைக் காண்கின்றோம். இதுபோன்றே குழந்தை இயேசுவை நாம் எமது உள்ளத்தில் குழந்தையாக ஏற்றுக் கொள்வோமாயின் நாமும் குழந்தை இயேசுவின் பெற்றோராகிய இறைவனிடம் தங்கி சீவிப் போம். துன்பம், துயரம், கைவிடப்பட்ட நிலை, எல்லாவற்றையும் இழந்த உணர்வு ஏற்படும் வேளைகளில் மட்டுமன்றி இன்பம், மகிழ்ச்சி, சந்தோஷ மான நிலைபரங்களிலும் இறைவனோடு தொடர்பினை, இறைவனில் தங்கி யிருக்கும் தன்மையைப் பெற்றவர்களாவோம். குழந்தை இயேசுவின் பிறப்பு இத்தகு தன்மையை நம் உள்ளத்தில் ஏற்படுத்துகின்றதா?

குழந்தை இயேசு அன்று மாட்டுத் தீவனத் தொட்டியிலே (முன்னணை) குழந்தையாக கிடத்தியிருப்பதை மேய்ப்பவர்கள் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைப் பிரசித்தம் செய்தனர். ஆம் இன்றும் குழந்தை இயேசு குழந்தையாகப் பிற்நதுள்ளார் என்ற செய்தி, கிறிஸ்தவ மக்களாகிய எமக்குக் கொடுக்கப் படுகின்றது. குழந்தை இயேசுவை நாம் சென்று தரிசிக்கத் தயாராக உள்ளோமா? அவ்வாறாயின் குழந்தை இயேசுவைக் குறித்து நாம் எத்த கைய செய்தியைப் பிரசித்தம் செய்யப் போகின்றோம்.

இன்று குழந்தை இயேசுவின் பிறப்பை விமரிசையாகப் பல்வேறு பல காரங்கள் செய்து புத்தாடை அணிந்து, ஆடல் பாடல் கேளிக்கைகள் மூலமாக நினைவு கொள்கிறோம். ஆனால் அன்று குழந்தை இயேசு பிறப்பதற்கு ஒரு சுத்தமான இடமில்லை, குழந்தையைப் போர்ப்பதற்கு அழகான துணியில்லை, குழந்தையைப் பராமரிப்பதற்கு பராமரிப்பு ஆயா இல்லை, குழந்தை இயேசு உழைக்கும் மிருகம் வசிக்கும் இடத்தில், உழைக்கும் மிருகம் உணவுண்ணும் தீவனத் தொட்டியில், கந்தை உடையில் குழந்தையாக வைக்கப்பட்டிருந்தார் என்பதனை நற்செய்தி நூல்கள் வாயி லாக அறிகின்றோம். இவ்வாறான குழந்தை இயேசுவின் பிறப்பு இன்று எமக்கு எத்தகைய செய்தியைக் கொடுக்கின்றது?

குழந்தை இயேசுவின் பிறப்பு – குழந்தைப் பண்பையும், உழைப்பை மதிக்கும் – உழைப்பாளரை உயர்த்தும் பண்பையும், நமக்கு கற்றுக் கொடுக்கின்றது. மீண்டும் ஒரு முறை குழந்தை இயேசுவின் பிறப்பை நினைவு கூரும் போது இவ்விரு பண்புகளையும் மனத்திலிருத்தி குழந்தை இயேசுவை எம் உள்ளத் தில் குழந்தையாகப் பிறக்கக் காண்போம்.

## PEACE AMONG THE RELIGIONS

"No peace among the nations without peace
Among the religions.
No peace Among the religions without dialogue
Among the religions,
No dialogue Among the religions without
investigation of the foundations of the religions"

*- Hans Kung -*

# ஆசிய இறையியலாளர்

# அருள்திரு. அறிவர் டி. ரி. நயில்ஸ் அவர்கள்

அனைத்துலகத் திருச்சபை மாமன்றத்தின் தலைவர்களுள்—சிறந்த ஆசியத் தலைவராகத் திகழ்ந்தவரும்—ஆசியக் கிறிஸ்தவ மன்றத்தை நிறுவி (EACC) பயன் தரும் முறையில் அதனை இயக்கி வந்தவரும்—இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலை சிறந்த தலைவராய் இறுதிவரை நற்பணியாற்றிய வரும்—தெல்லிப்பளையில் பக்தி நிறைந்த கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த வருமாகிய—டானியல் தம்பிராசா நயில்ஸ் அவர்களின் வாழ்க்கைப் பணியை நன்றியுடன் நினைவுகூர்வதற்காக நடத்தப்படும் இவ்வாழிபாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி. யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும் இந்நன்றி தோய்ந்த நினைவு கூரும் வழிபாட்டில் இப் பெரியாரின் சிறந்த பண்பியல்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள இந் நல்வாய்ப்பு கிடைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

## வாழ்கை

"நல்லாரைக் காண்பதும் நன்றே – நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே" - என்ற முது மொழிக்கேற்ப – பல ஆண்டுகளாக நன்கு அறிந்த இம் மாபெருந் தலைவரைப் பற்றி பேசுவது— என் உள்ளத்தையே புனிதமாக்கும் என்பதே என் நம்பிக்கை.

தென் இந்திய திருச்சபை யாழ் ஆதினத்தினரால் புனித இடமாகக் கருதப்படும் தெல்லிப்பளையில்—1816ம் ஆண்டு அமெரிக்கன் மிஷனரிமார் தமது முதாலவது பணிக்களத்தைத் தொடங்கினர்.— முதலாவது ஆசிரியப் பயிற்சிக் கலைக்கூடம்—மருத்துவமனை ஆகியன இங்கு தான் முதலில் தொடங்கப்பட்டன.

தெல்லிப்பளை மிஷன் கலாசாலையில் கற்ற–அறிவர் நயில்ஸ் அவர்களின் கொள்ளுப் பாட்டனார்– வேலாயுதர் கதிரேசன் என்பவர்– திருமுழுக்கு பெற்ற பின் நத்தானியேல் நயில்ஸ் என்ற பெயரைப் பெற்றார். அமெரிக்கன் மிஷனில் கிறிஸ்தவனான முதல் மாணவன் இவரே. அன்று இவரோடு Jordan Lodge என்பவரும் திருமுழுக்குப் பெற்றார். நயில்ஸ் போதகரின் தந்தை வழிகொள்ளுப் பாட்டனார் நத்தானியேல் நயில்ஸ், தாய் வழி கொள்ளுப் பாட்டனார் Jordan Lodge என்பவர்களே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நத்தானியேல் நயில்ஸ்

இவர் 10 ஆண்டுகள் மிஷன் கலாசாலையில் பயிற்சி பெற்ற பின், அமெரிக்கன் மிஷன் சபையில் தேவ ஊழியனாகப் பணியாற்றினார். Batticotta Seminary யில் சில ஆண்டுகள் ஆசிரியராகவும், பின்னர் சிறிது காலம் உடுவில் மகளிர் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் நற்செய்திப் பணியில் மிக்க ஆர்வங் கொண்டவர். யாழ் சுதேச சுவிசேஷ சங்கத்தை நிறுவுநர்களில் இவரும்' ஒருவராவார். அமெரிக்கன் மிஷன் நிறுவனங்களில் பணியாற்றிய பின்– தமது 65ம் வயதில் மெதடிஸ்த சபையில் சேர்ந்த நற்செய்திப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். இவர் ஒரு சிறந்த சொற்பொழிவாளர்.

## டி. பி. நயில்ஸ்

நத்தானியேல் நயில்சின் மகன் வண. டி. பி. நயில்ஸ், **(1836–1915)** தன் தந்தையின் சிறந்த திறமைகளைப் பெற்றிருந்தார். – சபை ஊழியத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். உவெஸ்லி சகோதரர்களின் பாடல்களிற் பலவற்றைத் தமிழில் பெயர்த்து – ஒரு புதிய தமிழ் பாட்டுப் புத்தகத்தை வெளியிட்டார். பல சங்கீதங்களைக் கீர்த்தனைகளாக ஆக்கிக் கொடுத்தார். இவர் ஒரு சிறந்த பேச்சாளர்– சிறந்த நிர்வாகி, –நற்செய்திப்பணியில் சபையார் ஈடுபட வேண்டுமென்ற ஆர்வத்துடன் "உள்ளூர் நற்செய்திப் பணிச் சங்கம்" ஒற்றைத் தொடக்கி, மட்டக்களப்பிலும் யாழ்பாணத்தில் வேறு பல இடங்களிலும் பணியாற்றினார்.– நற்செய்திப் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் சபையாரை ஊக்குவித்து– முன்னின்று திறமையாக இயங்க உதவினார்.

## டபிள்யூ. டீ. நயில்ஸ்

இவர் வண. டி. பி. நயில்ஸின் மகன். – டி. ரி. நயில்ஸ் போதகரின் தந்தை, இவர் சட்ட வல்லுனர் நீதி மன்றத்தின் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றி னார். திருச்சபைகளின் ஒருமைப்பாட்டிற்காக 1938ஆம் ஆண்டிலேயே அதிக முயற்சி எடுத்தார். – நற்செய்திப் பணியில் அதிக ஆர்வத்துடன் ஈடு பட்டார்.– திருச்சபை தன்னாட்டு மயமாக்கப்படல் வேண்டும் என்பதற்காகப் பல முயற்சிகளை எடுத்து பலரை இதில் ஈடுபடச் செய்தார். – 1939 இல் மருதனார் மடத்தில் யாழ் கிறிஸ்தவ ஒன்றிப்பின் வழியாக அனைத்துச் சபைகளும் சேர்ந்து கிறிஸ்தவ சேவ ஆசிரமத்தை நிறுவ அதிகமாக உழைத்தார்.

## புகழ் புலர்ந்தது

இத்தகைய சிறந்த மரபில், தானியேல் தம்பிலாசா நயில்ஸ்–1908, மே மாதம் 4ம் திகதி பிறந்தார். இவர் பிறந்து ஒரு மாதத்திற்குள் இவரின் தாயார் இறந்தார். இவரின் எட்டாம் வயதில் இவரின் பாட்டனார் கனம். டீ. பி. நையில்ஸ் மரித்து விட்டார் இவரின் சிறந்த பண்புகள், கிறிஸ்தவ பக்தி ஆகியன. நயில்சின் பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் ஆழமாகப் பதிந்தது. அதனால் சிறுவயதிலேயே தன் பாட்டனார் போல் போதகராய் வரவேண்டுமெனத் தனக்குள் தீர்மானித்தார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்ற முதுமொழிக்கிணங்க யாழ் மத்திய கல்லூரியில் படிக்கும் போதே, தனது பாட்டனாரில் விளங்கிய நுண்ணறிவு, விடாமுயற்சி, அன்புடைமை ஆகிய சிறந்த பண்புகள் நயில்சில் மலரத் தொடங்கின–தன் உயர் தரப் படிப்பிற்காக இலங்கைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து – திறமையாகத் தன் இடைநிலைத் வகுப்புத் தேர்வில் சித்தியடைந்தார். இதன் பின் தன் தகப்பனாரின் அனுமதியோடு நயில்ஸ் பங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியில் சேர்ந்து தன் இறையியல் படிப்பை திறமையாகக் கற்று முதலாம் தரத்தில் சிறப்பு மதிப்புடன் B.D பட்டம் பெற்றார். (1929–1933) இறையியல் படிப்பு முடிந்ததும், இலங்கை மெதடிஸ்த சபையில் திருப்பணியாளராக நியமனம் பெற்றார். 1936 இல் குரு அபிஷேகம் பெற்றார் – இவர் அருளுரையாற்றுவதில் சிறந்தவர். இவர் ஆற்றிய பிரசங்கங்களையும், திருமறைப் படிப்புக்களையும் கேட்டு மக்கள் பெரும் பயனடைந்து வந்தனர். இவர் புதிதாக எழுதிய 45 பாடல்கள் கிழக்காசிய கிறிஸ்தவ மன்றப் பாடல் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவர் யாழ் மத்திய கல்லூரியின் முதல்வராகவும் கடமையாற்றிச் சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்தார்.

இவர் அனைத்துலகத் திருச்சபைக்கு ஆற்றிவரும் பெரும் பணிகளைப் பாராட்டு முகமாக, வெளிநாடுகளிலுள்ள மூன்று இறையியல் கல்வி நிறுவனங்கள் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி பாராட்டின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"தோன்றிற் புகழொடு தோற்றுக" என்றார் வள்ளுவப் பெருந்தகை. புகழை விரும்பாதவர் எவருமில்லை, ஆனால் உண்மையான புகழைப் பெற வேண்டு மேயாகில் –அதற்கு ஒருவர் செலுத்த வேண்டிய விலை – விடாமுயற்சியும் கடின உழைப்புமே. சிறந்த குடும்ப மரபில் தோன்றிய நயில்ஸ் போதகர் கடினமாக உழைத்தார். புகழ் பெற்றார் அது நிலைத்தது.

1938 இல் நடைபெற்ற அனைத்துலக மிஷனரி மாநாட்டில் சிறப்பு அருட் பொழிவாற்றினார்.– இந்த நிகழ்வு இவர் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இதன் பின் வேறு பல அனைத்துலக கிறிஸ்தவ மாநாடு களில் முக்கிய பங்கெடுத்தார். இம் மாநாடுகளில் இவர் அளித்த அறிவுரை களும் வழி நடத்துதலும் பெரிது – பலர் நற்பயன் அடைந்தனர்.

1948 – அம்ஸ்டர்டாமில் நடைபெற்ற அனைத்துலக திருச்சபையின் தொடக்கப் பேரவையில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இவர் ஆற்றிய சொற்பொழிவில் ஆழந்த பொருளும், எதிர்கால நோக்கும் பொதிந்திருந்தன – அனைத்து மக்களின் மனதைக் கவர்ந்தது. இவர் வழியாக ஆசிய திருச் சபையின் குரலைக் கேட்ட ஐரோப்பிய சபைத் தலைவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இதன் பின் இலங்கை மெதடிஸ்த சபையின் வட மாவட்டத் தலைவராகவும் பணியாற்றினார்.

பல நாடுகளில் இயங்கும் திருச்சபைகளைச் சந்தித்து, பல பொறுப்புக்களை ஏற்று– குறிப்பாக ஆசிய நாடுகளில் நெருக்கடிகள் மத்தியில் இயங்கிவரும் சபைகளை ஊக்குவித்து, திடமான விசுவாசத்துடன் இயங்க உதவி செய் தார். பின்னர் தாம் நிறுவிய கிழக்காசிய மன்றத்தில் செயலராக 1957–1967 வரையிலும், பின்னர் 1968–1970 வரையும் இம் மன்றத்தின் தலைவராகவும் சிறந்த பணியாற்றினார். இம் மன்றத்தின் வழியாக–மோனாட்டுச் சபை களுக்கு ஆசிய சபைகளின் பிரச்சனைகளையும் – அவர் நற்செய்திப் பணி யில் காட்டும் ஊக்கத்தையும் தெளிவாக விளக்கி வந்தார். இவரின் தலைமையில் ஆசிய சபைகள் முன்னின்று இயங்கி வந்தன. இவர் இயற்றிய

30க்கும் மேலான நூல்கள் பல கட்டுரைகள் – நடத்திய திருமறைப் படிப்புக்கள் ஆசிய திருச்சபைகளுக்குப் பெரும் பயனளித்தன.

## நற்செய்திப் பணி

இவர் எழுதிய நூல்களில் நற்செய்திப் பணிக்கு முக்கிய இடமளிக்கப்பட்டது. Christianity was brought to Asia as a Potted Plant" என்று கூறி – எங்கள் மண்ணில்– கலாசாரத்தில் – கிறிஸ்த சமயம் நாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். நற்செய்திப் பணியை விளக்க 1937 இல் Sir we would see Jesus" என்ற நூலை வெளியிட்டார். பிற சமயங்களுடன் நல்ல நட்புறவு கொள்ள வேண்டும் – அவர்களுடனும் கடவுள் செயலாற்று கிறார் என்று வற்புறுத்தி வந்தார். 1946 இல் வெளியிடப்பட்ட Eternal Life Now" என்ற நூலில் புத்த மதத்தினருக்கு கிறிஸ்தவத்தை எவ்விதம் விளக்க வேண்டும் என்பதை விளக்கினார்.

கிறிஸ்தவ சபைகளில் பக்தி விருத்தி செயல்பட வேண்டும் என்ற நோக்கு டன் பல பக்தி நூல்கள் இயற்றினார்."For Today" (1949) என்னும் நூலை ஓர் ஆண்டிற்குரிய தியானப் புத்தகமாக வெளியிட்டார். "Reading the Bible Today" இது ஓர் அருமையான நூல். 15 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாசிக்க வேண்டிய நூல் இது.

"திருவெளிப்பாட்டு நூலை" சபையார் நன்கு புரிந்து கொள்ளத்தக்கதாக As Seeing the Invisible" என்ற நூலை வெளியிட்டார். பலரால் பாராட்டப் பட்ட நூல் இது. இவர் எழுதிய நூல்களில் மிகச் சிறப்பான நூல் "Upon the Earth" என்பது, இதுவும் அருட்பணி பற்றி முறைப்படி விளக்கும் சிறந்த நூல். லெந்து காலத்திற்குரிய– "The Power at Work Among us" (வாழ்கையில் வல்லமை) என்ற நூலை வெளியிட்டார். இந் நூல் தமிழில் பெயர்க்கப்பட்டது.

இவர் எழுதிய கடைசி நூல் A Testament of Faith" இவர் இந் நூலிற்குரிய சில அதிகாரங்களை எழுதிய வேளையில் – 1970 இல் எதிர் பாராத வகையில் இறந்தார். இவர் வைத்திருந்த குறிப்புக்களைத் தேடி எடுத்து இவரின் மகன் Dhayalan Niles இந் நூலைத் தொகுத்து வெளி யிட்டார்.

நான் முன்னர் கூறியது போல் நயில்ஸ் போதகரின் இறையியல் நற்செய்திப் பணி சார்ந்தது. (Theology of Evangelism) நயில்ஸ் போதகர் தன் முன்னோரைப் போன்று – நற்செய்திப் பணியில் மிக்க ஆர்வங் கொண்ட வராய் இத் துறையில் அதிகமாய் உழைத்தார்.

"ஒரு ஏழை யாசகன் மற்ற யாசகனுக்கு எங்கு உணவு பெறலாம்" எனக் கூறுவதைப் போன்றது நற்செய்திப் பணி என்கிறார்.– அதாவது கிறிஸ்து வின் அருளைப் பெற்ற ஒருவன் – கிறிஸ்துவை அறியாத ஒருவனுக்கு மீட்பின் வழியைக் காட்டுவதைப் போன்றதாகும் என்பதே.

## திருச்சபை ஒருமைப்பாடு

திருச்சபை ஐக்கியத்திற்காக நயில்ஸ் போதகர் –அதிகமாக உழைத்தார். நாம் முன்பு கவனித்தது போல– இவரின் தந்தை வண. டபிள்யூ. டீ. நயில்ஸ் இலங்கையில் திருச்சபை ஒன்றுபட வேண்டும் என்று பல இடங்களில் கருத்தரங்குகளை நடத்தி வலியுறுத்தினார். நயில்ஸ் போதகரும், இலங்கை யில் சபைகள் ஒன்றாக இணைய வேண்டும் என்பதற்காக அயராது உழைத் தார். 1972 இல் சபை ஐக்கியத்திற்காக ஒரு நாளும் குறிக்கப்பட்டது.– ஆனால் எதிர்பாராத வண்ணம் இந்த நிகழ்வுக்கு எதிராக வழக்கு போடப்பட்டதால் – இது நிறைவேற்றப்படவில்லை.

கனம் நயில்ஸ் இறந்த பின் இப் பொறுப்பை ஏற்று திருச்சபை ஐக்கிய இயக்கத்தை வழிநடத்த எந்தச் சபைத் தலைவரும் முன்வரவில்லை. இப்பொழுது யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் – திருச்சபை ஐக்கியத்திற்காக எடுத்துவரும் முயற்சிகள் நிறைவேறுமென நம்புகின்றோம்.

இறுதியாக –நயில்ஸ் போதகர் அவர்கள் சமுதாய மாற்றத்திற்காக அதிகம் பாடுபட்டதை நாம் மறக்க முடியாது. கிறிஸ்தவர்கள் நற்செய்தியை வாய் மொழியினாலும் வாழ்க்கையினாலும் – உடன் வாழ் மக்களுக்கு அன்புடன் எடுத்து உரைக்க வேண்டும். பிற சமய மக்களைச் சகோதரரைப் போல் மதித்து அவர்களின் நல வாழ்வுக்காக கரிசனையோடு திருச்சபை செய லாற்ற வேண்டும். கிறிஸ்துவின் தன் நிகர் அற்ற தன்மையைப் பற்றி நாம் பிறருடன் வாதாடப்படாது – எங்கள் அன்புச் செயல்களால் – இயேசு பெருமானின் அன்பை மற்றவர் புரிந்து கொள்வார்கள். – அப்போது கிறிஸ்துவின் தனித் தன்மையைத் தாமே அறிவார்கள் என்றார்.

அறிவர் உவில்லியம் கேரி நான் இறந்த பின் என்னைப்பற்றி ஒன்றும் கூறாதீர் – உவில்லியம் கேரியின் இரட்சகரைப் பற்றியே கூறுங்கள் என்று தன் நண்பன் அறிவர் டவ்(Daff) க்குக் கூறினார். நயில்ஸ் போதகரும் இதனையே கூறியிருப்பார். – ஆம், கேரி, நயில்ஸ் போன்றோரின் வழியாகவே நாம் இரட்சகரைப் பற்றி அதிகம் அறிய முடிகிறது – நான் ஒரு பாவி, எனக்காக இயேசு மரித்தார் இயேசுவின் வழியாக கடவுள் அன்பு செய்தவர்களில் நானும் ஒருவன் – இவ்வுலகில் நாம் வாழும் போது நாம் செய்யும் பணி எப்போதும் நமக்கு முன் பணியாற்றிய ஒருவரின் பணியைத் தான் நாம் தொடர்கின்றோம். அவர்கள் விட்ட இடத்திலிருந்து தான் நாம் தொடங்குகின்றோம் – நாங்கள் விட்டுப் போகும் போது அந்த இடத்தில் வேறொருவர் தொடங்குவார்......"MOVE ON" என்ற வாசகத்தோடு ஒரு பலகை எங்கள் எல்லாப் பணிகள் மேலும் தொங்குகிறது என்று அறிவர் நயில்ஸ் ஒரு முறை கூறினார்.

நயில்ஸ் போதகரின் வாழ்க்கை முடிந்து **31** ஆண்டுகள் நிறைவுற்றது.– அவர் கடந்து போய்விட்டார். அவர் விட்ட இடத்திலிருந்து, மற்றவர்கள் திருப் பணியைத் தொடர வேண்டும். ஆண்டவரின் அடியான் டி. ரி. நயில்ஸ் அவர்களின் தலை சிறந்த பணிக்காக இறைவனுக்கு நன்றி செலுத்து வோமாக,

(யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் 17.07.2001 புனித பேதுரு ஆலய TRIMAR மண்டபத்தில் நடத்திய - அமரர் திரு. அறிவர். டி. ரி. நயில்ஸ் அவர்கள் இறந்த 31ம் ஆண்டை நினைவு கூரும் வழிபாட்டில் - அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர்அவர்கள் ஆற்றிய புகழுரை.)

## *Lead Kindly Light*

விண் ஒளியே, நள் இருட்டில் என்னை – நடத்துமே;
இருள் ஆழம், வீடும் தூரம், என்னை – நடத்துமே;
ஓர் அடிதான் உம்மிடம் நான் கேட்பேன்,
தூரக் காட்சி காட்டும் என்று சொல்லேன்.

# இன்றைய போர்ச் சூழ்நிலையில் திருச்சபைகளின் பணி என்ன?

*- செ. செல்வந்தா -*

## முன்னுரை:

இன்றைய போர்ச் சூழலில் திருச்சபைகள் ஆற்றிவரும் பணிகளை நாம் நன்கு அறிவோம். ஆயினும் இப்பணிகள் அனைத்தும் ஏற்ற பயனளிப்ப தாகத் தெரியவில்லை. எனவே நமதாண்டவரின் திருவுளத்திற்கேற்ப நாம் செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பதை இயேசுபிரான் (மத் 18:10–14) ல் காணப்படும். காணாமற் போன ஆட்டைத் தேடும் மேய்ப்பன் பற்றிய உவமை யினூடாக தெரிவிக்கின்றார். இதே உவமையினை நாம் லூக்கா 15:4–7 வரையான பகுதியிலும் காண முடிகின்றது. மேலும் யோவான் 10ம் அதிகாரத்தின் முற்பகுதியிலும் நல்ல மேய்ப்பன் பற்றிய அறிவுரைகளை காண முடிகின்றது. இப்பகுதிகளை நாம் உன்னிப்பாக அவதானிக்கும்போது இன்று நாம் செய்ய வேண்டிய பணிகளை இவை எடுத்தியம்புகின்றன.

## சாரம்:

மத் 18:10–14 வரையான பகுதியில் காணப்படும் காணாமற் போன ஆடும், அதனைத் தேடும் மேய்ப்பன் பற்றிய உவமை ஆண்டவர் இயேசுபிரான் கூறிய உவமைகளில் மிகவும் எளிதானதாக அமைகின்றது. யூதேயா நாட்டில் வாழும் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளிற் சிலவற்றை அடிக்கடி தவறவிடுவதுண்டு. ஏனெனில் இங்கே ஆடுகளுக்கு வேண்டிய புல்லுள்ள இடங்கள் மிகக் குறைவு. எனவே புல்லைத் தேடி அருகிலுள்ள மலைச் சாரல்களுக்கு ஆடுகளை மேய்ப்பர்கள் மேய்த்துச் செல்வது வழக்கம், இந்த மலைச் சாரல்களில் எல்லைச் சுவர்கள் காணப்படாமையினால் ஆடுகள் பெரும்பாலும் புல்லைத் தேடி அலைந்து திரிவதுண்டு. இதனால் அடிக்கடி ஆடுகள் வழிதவறிப் போவதுண்டு. இவ்விதம் வழிதவறிப் போகும் ஆடுகள் சில வேளைகளில் முட்புதர்களில், பற்றைகளில் தவறி விழுந்து அவற்றுள் சிக்குண்டு தம்மைக் காப்பாற்றுவாரின்றி தவித்து இறப்பதுமுண்டு.

பலஸ்தீனா நாட்டு மேய்ப்பர்கள் காணாமற் போன ஆடுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் வல்லவர்களாக விளங்கினர். இவர்கள் காணாமற் போண

ஆடுகளைத் தேடிப் பல கிலோ மீற்றர் தூரம் சென்று உயரமான, செங்குத்தான மலைகள் எல்லாம் ஏறி ஆடுகளைக் கண்டுபிடித்து கொண்டு வருவார்கள்.

ஆண்டவர் இயேசுவின் காலத்திலும் அங்கு வாழ்ந்த மேய்ப்பர்கள் சிறு சிறு குழுக்களாக ஒன்றிணைந்து கூட்டாக தங்கள் ஆடுகளை வெளிப்புறத்தில் மேய்த்து வந்தார்கள். இங்கு ஆடுகள் சமூகத்திற்கு பொதுவானதாக இருந்தன. ஒரு தனிநபருக்கு சொந்தமாக ஆடுகள் காணப்பட்டன. எனவே ஒரு பட்டி ஆட்டுக்கு இரண்டு, மூன்று மேய்ப்பர்கள் பொறுப்பாக இருந்தார்கள். இப்பட்டியிலிருந்து ஒரு ஆடு தொலைந்து போனால் ஏனைய ஆடுகளை மற்றைய நபர்களிடம் கொடுத்துவிட்டு ஒருவர் காணாமற் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடிப்பது வழக்கமாக இருந்தது.

இப்பணியில் ஈடுபடும் மேய்ப்பர்கள் அதிகம் கஷ்டப்பட்டு, தம்மைத் தியாகம் செய்து தேடலில் ஈடுபடுவார்கள். ஏனைய மேய்ப்பர்கள் மாலையில் தமது ஆடுகளை வீட்டிற்கு கொண்டு செல்வதுடன் அயலவர்களுக்கு தம்முடன் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மேய்ப்பன் காணாமற் போன ஆட்டைத் தேடி மலைப்பகுதிகளுக்குச் சென்று விட்டான் என அறிவிப்பார்கள், இச் செய்தியை அறிந்த மக்கள் ஆட்டைத் தேடித் சென்ற மேய்ப்பன் எப்பொழுது வருவான் என்று ஆவலாய் மலைச் சாரலைப் பார்த்த வண்ணமாக இருப்பார்கள். அவன் திரும்பி வரும் போது பெருமகிழ்ச்சி கொண்டு அவனை வரவேற்பார்கள்.

இங்கு அதாவது (மத்18:10–14) ல் வரையான பகுதியில் இயேசுபிரான் மேய்ப்பன் என்ற பதவியில் கடவுளையே வைத்து விளக்குகின்றார். இங்கே கடவுளின் அன்பு எத்தகையது என்பதையும் காட்டுகின்றார். கடவுளின் அன்பைப் பற்றி இவ்உவமை பலவகையாக விளக்குகின்றது. அவையாவன:

*(i) தனி நபரில் வைக்கும் கடவுளின் கரிசனை நிறைந்த அன்பு–*
ஆட்டுப்பட்டியில் ஒரு ஆடுதொலைந்து போனதும் ஏனைய ஆடுகள் மிச்சமாக இருந்தாலும், தொலைந்து போன அந்த ஆடு தேவையாக இருக்கின்றது. அந்த ஒரு ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரை மேய்ப் பனுக்கு மன ஆறுதல் இல்லை – இதனைப் போலவே குடும்பத்தில் தவறிய ஒரு நபர் திரும்பும் வரை கடவுள் ஆறுதலாயிருக்க மாட்டார், தேடிக் கொண்டேயிருப்பார்.

*(ii) கடவுளின் அன்பு பொறுமையுள்ள அன்பு –*
ஆடுகள் புத்தியில்லா ஜீவன்கள் எனவே அவை தானாகவே வழிதவறிப் போகும். இன்று எங்களில் பலர் புத்தியில்லாத நபர்களின் நடத்தை

களைப் பொறுத்திருக்க முன் வருவதில்லை. அந்த நபர் தானாகவே இந்தத் துன்பத்தைத் தேடிக் கொண்டார். என்று பேசி நம்மிற் பலர் பேசாதிருக்கின்றோம். ஆனால் கடவுள் அப்படிப்பட்டவர் அல்ல. புத்தி யற்ற நபர்களையும் நேசிக்கின்றார். அவர்கள் தாம் செய்த பாவங்களுக் காக பாடுபட்டாலும் அத்தகையவர்களையும் கடவுள் நேசிக்கின்றார்.

*(iii) கடவுளின் அன்பு நாடித் தேடும் அன்பு –*

காணாமற் போன ஆடு திரும்பிவரும் வரை மேய்ப்பன் காத்துக் கொண்டிருக்கவில்லை. அதனைத் தேடிப் புறப்பட்டான். இதுவே கடவுளைப் பற்றிய கிறிஸ்தவ கருத்தாகும். இயேசு கிறிஸ்துவின் வழி யாக கடவுள் வழிதவறிப் போனவர்களைத் தேடவந்தார். கடவுள் ஆவலுடனேயே அவர்களைத் தேட வந்தார்.

*(iv) கடவுளின் அன்பு பெருமகிழ்ச்சி அடையும் அன்பு –*

காணாமற் போன மகன் திரும்புவதையிட்டு தந்தை பெருமகிழ்ச்சி கொள்கின்றார். கோபத்தோடு அவனை எச்சரிக்கை செய்து இங்கே ஏற்கவில்லை. மகிழ்ச்சியோடு அவன் ஏற்றுக் கொள்ளப்பட்டான். இனி ஒரு போதும் அவனை நம்ப முடியாது என்று கண்டித்து பின்னர் அவனை ஏற்கவில்லை, ஒருவனின் கடந்த காலத்தை மறக்காமலிருப் பது மனித இயல்பு. அவன் செய்த பிழைகளை அடிக்கடி நினைப்பதும் வழக்கம். ஆனால் கடவுள் அப்படிச் செய்பவரல்ல. பாவங்களை தன் முதுகுக்கு அப்பால் எறிந்து விடுகின்றார். பாவி அவரிடம் வரும் போது மகிழ்ச்சியோடு அவனை ஏற்றுக் கொள்ளுகின்றார்.

*(v) கடவுளின் அன்பு பாதுகாக்கும் அன்பு –*

சிலர் செலுத்தும் அன்பு குறிப்பிட்ட நபரை கெடுப்பதாயிருக்கும். வளர விடாமல் தடுப்பதாயிருக்கும். ஆனால் கடவுளின் அன்பு அப்படிப் பட்டதல்ல தேடிப் போய் மீட்கும் அன்பாக இருக்கின்றது. குறிப்பிட்ட மனிதனை மீட்டு தன் அயலாருக்குச் சேவை செய்ய உதவும் அன்பாக இருக்கின்றது, பெலவீனனை பெலனுடையவனாக்கும் அன்பாக இருக்கின்றது. பாவத்தால் சிறைப்பட்டவனை பரிசுத்தத்தில் சுயாதீன மாக்கும் அன்பாக இருக்கின்றது, சோதனையில் அலைபவனை சோதனையை மேற்கொள்பவனாக்கும் அன்பாக இருக்கின்றது.

## முடிவுரை:

ஆண்டவர் இயேசு பிரான் கூறிய உவமைகள் அனைத்தும் பொதுமைப் பண்பு கொண்டவை. அதே நேரத்தில் அவை வெவ்வேறு கால, இட, சூழமைவுகளில் வெவ்வேறு விளக்கம் பெற்று வந்துள்ளன. ஆனால்

ஆண்டவராகிய இயேசு பிரான் இவ் உவமைகளைக் கூறியதன் நோக்கமே மக்களுடைய சிந்தனைகளைக் கிளறி அவர்களைச் செயற்படத் தூண்டுவதே ஆகும். இயேசு பிரான் கூறிய உவமைகள் அனைத்தும் அவருடைய கால, சூழமைவுகளின் பின்னணியில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை இன்று நாம் எமது சூழலுக்கேற்றவாறு விளக்கிக் கொள்வது அவசியமாகின்றது. அந்த வகையிலே மத்தேயு 18:10–14 வரையான பகுதி இன்று எம்முடைய சூழலுக்கு ஏற்ற கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதே வேளை இன்றைய போர்ச் சூழலில் திருச்சபையின் பணி என்ன? என்பதற்கு அறை கூவலையும் விடுக்கின்றது. இன்று திருச்சபையின் பணி தேவையில் வாடுவோருக்குத் துணை செய்வதும், தவறிப் போனவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதும், அவர்களுக்கு ஆறுதலளிப்பதுமே என்று இப்பகுதி விளக்குகின்றது.

கிறிஸ்தவ சமூகம், திருச்சபை ஒரு போதும் தனக்கென்று இருப்பதில்லை. கடவுள் இதனை உருவாக்கியதன் நோக்கமே இது தவறிப் போனவர்களுக்கு பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான். இன்று எம்முடைய சூழ் நிலமையில் காணாமற் போன ஆடுகளாக நிலம், வேலை இல்லாமல் வாடுவோர், பசி, நோய் முதலியவற்றால் துன்பப்படுவோர், மற்றும் நாட்டில் நடைபெற்று வரும் யுத்தத்தினால் நடைபிணங்களாகத் திகழ்வோர், சிறைகளில் வாடுவோர் சித்தரிக்கப்படுகின்றார்கள். திருச்சபையின் தற்போதய பணி ஒன்றாகச் சேர்ந்துள்ள 99 ஆடுகளையும் கட்டிக் காப்பதன்று, இன்று தேவையில் வாடுவோரைத் தேடிக் கண்டுபிடித்து பணி செய்வதே திருச்சபையின் தலையாய பணி என்று அறைகூவல் விடுக்கினறது.

இன்று எமது நாட்டில் போர் அனர்த்தங்களினால் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவ்விதமான சூழ் நிலையில் வாழுகின்ற திருச்சபையும், திருச்சபை மக்களாகிய நாமும் சமயம் தொடர்பான நிகழ்வுகளை மட்டும் கருதத்தில் கொண்டவர்களாக செயற்பட்டு வருகின்றது. .இந்தச் சிந்தனைப் போக்குமாற வேண்டும். மனித மாண்பும், உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு உதவி செய்தும் ஒரு சமயச் சடங்கினை நிறைவேற்றுவதை விட இன்றைய நாளில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அரசின் அடக்கு முறையால் அவதிப்படுகின்ற மக்களுக்கு ஆதரவு கொடுப்பது திருச்சபையின் இன்றியமையாத பணியாகுமென்று காணாமற் போன ஆடு பற்றிய உவமை இன்று திருச்சபைக்கு அறை கூவல் விடுக்கின்றது. இவ் உவமைவிடும் அறைகூவல் அனைத்துத் திருச்சபைகளிலும் செயல் வடிவம் பெற எம் திருச்சபைகளைத் தட்டி எழுப்பிடுவோம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

# நாம் நம்மவருக்காக

- ராஜன் றோகான் -

நடைபெறுவதோ!
சமாதானத்திற்கான யுத்தம்
நடுவீதியிலோ!
நம்மவரின் இரத்தம்
இதுதான் – எம்
தேசத் தலைவர்களின் சித்தம்

சுயநிர்ணய உரிமையாம்
சுதந்திர வாழ்வாம் – என
அடிக்கடி ஒலிக்கிறது
அழகான பேச்சு,
ஏனோ தெரியவில்லை
பெரும்பான்மையின்தெரிவெல்லாம்
தமிழரின் தலை நசுக்க
தாண்டவம் ஆடுகின்றது

அதிகாரம் அழைக்கிறது
எதற்கு?
அடிவருடிகளாய் இருப்பதற்கு!
உள்ளம் துடிக்கிறது
எதற்கு?
உரிமையை மீட்பதற்கு!
முழுமையான வாழ்வே
இயேசுவின் நோக்கம்!
விடுதலை அளிப்பதே – எம்
நேசரின் ஏக்கம்
மூடர்களா நாம்?
முடங்கி கிடப்பதற்கு!

அடிவருடிகளா?
ஆணவத்தை வணங்குவதற்கு!

திருச்சபையே!
தயக்கம் ஏன்
தருமத்தைக் காப்பதற்கு!

உயர்ந்த கோபுரமும்
விரிந்த சுவரும்
சாட்சியாகுமா?
சாட்சிய வாழ்வென்பது
சங்கீதம் பாடுவதா?

சங்கு முழங்குவோம்
பொங்கும் தமிழருடன்
கை இணைத்து
உறங்கியது போதும்
உடனெழுந்து
சமாதான பாதையை
சரி செய்வோம்!
சுதந்திர காற்றுக்கு
வழி சமைப்போம்!

நாம்! நல்ல சமாரியர்கள்
நடு வீதியில் கிடப்பது
நமது மானிடம்
நாம்!
நாத்தான்கள்,

நாசப்படுவது
நமது பெண்ணியம்

ஆம்,
நமது மக்களை வாழவைப்பது
நமது பொறுப்பு
இதற்குத் தான்
எமக்கு அழைப்பு

இனியும் பொறுத்தால்
நாளை நமக்கே
நியாயம் தீர்ப்பு, ~ ஆம்
நாளை நமக்கே
நியாயத் தீர்ப்பு

# வாழ்த்துப்பா

அன்பிற்கும் நற்பண்பிற்கும் இலக்கணமாய்த் திகழ்கின்ற எமது ஆசான் அருள்திரு. தானியேல் இராசரத்தினம் அம்பலவாணர்

B.A. (Hons) M.A, B.D.

அவர்களின் 77ஆம் பிறந்த நாளில் ~
இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி சுன்னாகம், யாழ் பேராய இறையியல் கல்லூரி குடும்பத்தினர் சார்பில் 05.08.2001 ஞாயிறு அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சிறப்பு திருவிருந்து வழிபாட்டில் ~ யாழ் பேராயர் பேரருட் பெருந்திரு முனைவர் சு. ஜெபநேசன் முன்னிலை யில் ~ கருணாகரன் அடிகளாராலும், மாணவர்களாலும் பாடப் பெற்றது.

பணிதிறம் ~ நட்பமாடை (தெமபிரதாடை)

### பல்லவி

வாழ்ந்திடுவீர் எந்தையே ~ இம்
மாவுல கமதிலே மங்கலமாய் என்றும் ~ வாழ்ந்திடுவீர்

### அனுபல்லவி

இறையியல் கல்லூரி இல்லத்தினர் நாங்கள்
இன்முகத்துடனே வாழ்த்துகின்றோமே ~ வாழ்ந்திடுவீர்

**சரணங்கள்**

தானியேல் இராசரத்தினம் அம்பலவாணரே
தாரணியில் புதிய பிறந்த நாளைக் கண்டீரே
ஆண்டவர் உமக்கு நீண்டாயுளும் தருக
ஆனந்தமாய் நாமே இறைஞ்சுகின்றோமே ~ வாழ்ந்திடுவீர்

தென்னிந்தியத் திருச்சபை யாழ் ~ பேராயத்திலே
திருத்தொண்டர் இயேசுவின் திருப்பணி புரிகின்றீர்
விண்ணவர் சேவையில் வீரமாய் விளங்கிட
நுண்ணறிவுடனே நூல்களை எழுதுகின்றீர் ~ வாழ்ந்திடுவீர்

இன்று பிறந்தநாள் கொண்டாடும் ஆசானே
என்றும் இனியவரே அன்புக்கும் இலக்கணமே
அன்றும் இன்றும் அருட்பணி புரிகின்றீர்
மன்னவர் இயேசுவில் மகிழ்வுடன் வாழ்கின்றீர் ~ வாழ்ந்திடுவீர்

*பாடல்: பண்: சங்கீத வித்துவான்*
***அருட்கலைஞர் வண. ம. கருணாகரன்***
அருள்திரு அம்பலவாணர் அவர்களின் மாணவன் ~ 1977

உடைந்த பாத்திரம் போன்ற என்னை
படைத்த பரம குருநாதா;
கடையேனுமெனைக் கண்ணோக்கி
அடைவுடன் ஆதரி அருள் நாதா;
விழுந்த என்னைத் தூக்கி நிறுத்தி
அழுமென் கண்ணீர் அறத்துடைத்து;
கழுவிக் காயம் பல ஆற்றி
பழுதறச் சுத்தம் பலமருள்வாய்;
எழும் என் இதயந் தனில்தேவே
தொழுதுனைத் தோத்தரித் தகமகிழ்வேன்;
தழுவித் தாமரைப் பாதம் பணிவேன்,
முழுவுளத்தால் அதை முத்த செய்வேன்.

***-சவரிராயன் இயேசுதாசன் -***

# நாங்கள் திருப்பணியாளர்கள்

- மை. நேசன் கெனடி -

திருப்பணியாளர் நாங்கள்
இறைவனின் திருவழியில்
இணைந்த இதயங்கள்

அன்பின் அடிவயிற்றில்
அவதரித்த ஆன்மாக்கள்
பரவிக் கிடக்கும் பயனுள்ள
பாத்திரங்கள்

திருமேனி
மூழ்கி எழுந்த
திருமறை கடலுள்
சந்தேக அழுக்குகளை
சரியாகப் போக்கி விட்டு
சரியாகப் போக்கி விட்டு
மூழ்கி முத்தெடுத்த ~
அடியவர்கள் நாம்

உலகத்தை நோக்கும்
ஊனக் குழந்தைகளே
எங்கள் வளர்ச்சிக்கும்
வாழ்விற்கும்
இயேசு தான் உயிர்ச்சத்து

பெயர் சொல்லி
அழைக்கப்பட்ட
இயேசுவின் பிள்ளைகள்

அன்புக் கனிகாய்க்கும்
பண்பு மரங்கள்

பட்டு விரித்த பாதையிலே
பாதங்கள் பட்டுச்
செல்ல வேண்டுமென்று
பதவிப் போர் நடத்தாதீர்கள்

தீமைக் கனியை
திரும்பத் திரும்பக்
கொடுத்தாலும்
வாங்க மறுக்காதீர்கள்

ஆதாமைப் போல்
அப்படியே வாங்குங்கள்
ஆனால்
வாய்க்குள் மட்டும்
போட்டக் கொள்ளாதீர்கள்
நாங்கள்
வாங்கா விட்டால்
எவரேனும் எளியவருக்கு
இதனைக் கொடுத்து
களங்கப்படுத்தி விடுவார்கள்

ஆம் ~ தியாக வழியில்
தீபமாக ஒளிருங்கள்
அரண்மனை விளக்காக விளங்க
விரும்பாதீர்கள்

இந்த தேசத்தின்
ஆன்மீக வளர்ச்சியே
எங்கள் கை ~
எந்தக் கை?
ஆணிக்குச் சொந்தமான கை!

இனி கறைபடியும்
தன்மைகள்
எங்கள் கரங்களுக்கு
வேண்டாம்
எங்கள் கரங்கள்
பரிசு
வாங்குவதற்கல்ல ~

எங்கள் கரங்கள்
ஆண்டவருக்குச் சொந்தமான
ஆகிலத்தின்
அன்புத் தாங்கிகள்,

ஓ . . . . . என்
இனிய நெஞ்சங்களே . . .
எங்கள்
கரங்களின் தெம்பைக் காட்ட
இதுவே நேரம்
புறப்படுங்கள்
நீதியின் உலகை
நிலையாகக் காண்பதற்கு!
அப்போது
புலப்படும்
புதிய வானம்
புதிய பூமி!

# இறைவன்

*- திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை -*

1) சூரியன் வருவது யாராலே
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வானில் மின்மினி போல்
கண்ணிற்படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி!
அதை நாம் எண்ணிட வேண்டாமோ!

2) தண்ணீர் விழுந்ததும் விதையின்றி
தரையில் முளைத்திடும் புல் ஏது?

மண்ணிற் போட்டது விதை யென்று
மரம் செடியாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவையெல்லாம்
கருவில் வளர்ப்பது யார் வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ!

3) எத்தனை மிருகம், எத்தனை மீன்
எத்தனை ஊர்வன பறப்பன பார்,
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்;
எண்ணத் தொலையா செடி கொடிகள்;
எத்தனை நிறங்கள் உருவங்கள்;
எல்லாவற்றையும் எண்ணுங்கால்
அத்தனையும் தர ஒரு கர்த்தன்
யாரோ எங்கோ இருப்பது மெய்

4) அல்லா வென்பார் சில பேர்கள்
அரன் அரியென்பார் சில பேர்கள்
வல்லான் அவன் பரமண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்று சில பேர் சொல்வார்கள்
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே!

5) அந்தப் பொருளை நாம் நினைத்து
அனைவரும் அன்பாய் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

# செய்திமடல்

## 01) ஏப்ரல் 21ம் நாள் 2001

எமது கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான சதீஸ் டானியல், எஸ். ஜே. துரைரத்னம், அன்றூ ஜெயானந்தம் முன்நாள் மாணவர் ~ திரு. ஐ. இராஜ்குமார் ஆகியோர்க்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா ~ பேராயர் ஜெபநேசன் அவர்கள் தலைமையில், ஆசிரம தேவா லயத்தில் நடத்தப்பட்டது. மெதடிஸ்த மிஷன் யாழ் மாவட்ட முகவர் அருள்திரு. கே. குருணாசேகரா அருட்செய்தி அருட்செய்தி வழங்கினார்.

## 02) மே 2001

இவ்வாண்டில் கல்லூரிக் களப் பயிற்சிக்காக ~ ஒரு பகுதி மாணர்வகள், மட்டக்களப்பில் ~ அருள்திரு. எஸ் ஜெபநேசன் அவர் களின் மேற்பார்வையில் உள்ள சபை வட்டாரத்தில் களப் பயிற்சியில் ஈடுபட்டனர். வேறு சிலர் நுவரேலியாப் பகுதியில் வண. எஸ். அன்ரனி அவர்களின் வழிநடத்துதலில் களப்பயிற்சியில் ஈடுபட்டனர்.

## 03) திருகோணமலையில்

இங்கு தென் இந்தியத் திருச்சபையினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பணிக் களத்தில் ~ ஒரு பகுதி மாணவர்கள் வண. ரீ. டானியல் இரஞ்சித் வழிநடத்தலில் ~ களப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

## 04) ஞான ஒடுக்கம்

எமது கல்லூரியின் ~ கல்வியாண்டு தொடக்கத்தில் ஜூன் மாதம் 9ம் திகதி பேராயர் ஜெபநேசன் அவர்களின் தலைமையில் ஞான ஒடுக்கம் நடைபெற்றது.

## 05) சகோ. ஸ்ரீபன் அம்பலவாணர்

எமது கல்லூரியின் வளர்ச்சியில் அதிகமாக ஈடுபட்டு வந்த சகோ. ஸ்ரீபன் அம்பலவாணர் அவர்கள் இம்முறை யூலை மாதம் 14ம் திகதி எமது கல்லூரியைச் சந்தித்து ~ மாணவர்களின் இறையியல் அறிவு வளர்ச்சிக்கேற்ற நூல்களை வெளியிடுவதைப் பற்றி கலந்துரையாடினார்.

இதற்காகத் தான் சென்னையில் தொடங்கவுள்ள பதிப்பத்தின் விபரங்களைப் பகிர்ந்து கொண்டார். கல்லூரி மாணவர்களின் நலன் கருதி தனிப்பட்ட முறையில் அநேக உதவிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## 06) இசைப் பேராசிரியர் வருகை

மதுரையிலுள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் இசைத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றும் அருட்கவிஞர் வித்துவான் தந்தை ம. கருணாகரன் அடிகளாா அவர்கள் எமத கல்லூரியின் வேண்டுகோளுக் கிணங்க, எமக்குக் கர்நாடக இசைப் பயிற்சி அளிப்பதற்காக வந்து பணியாற்றி வருகின்றது.

அருட்தந்தை அவர்கள் எங்கள் கல்லூரியில் தங்கி, யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிறிஸ்தவ சபைகளில் நற்செய்திப் பெரு விழாக்களை நடத்தி வருகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 07) பயிற்சிக் கருத்தரங்கு

எமது கல்லூரியின் மெய்யியல் மன்றத்தால் திரு. எஸ். எல். ஜோன் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் ~ புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறையில் பேராசிரியர் அருட்தந்தை ஏ. ஜெறாட் அடிகளார் நீற்சே அவர்களின் தத்தவம் பற்றிக் கருத்துரை வழங்கினார்.

# இறையியல் களஞ்சியம்

*ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) 200/=*
*தனிப்பிரதி 25/=*

தொடர்புகொள்க:-

**"இறையியல் களஞ்சியம்"**
**இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி,**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

# IRAI IYAL KALANJIYAM

*A Tamil Theological Quarterly*
*Annual subscription (Including postage within Sri Lanka) Rs. 80/=*
*Single Copy 25/=*

Subscription and Correspondence to :

*Irai Iyal Kalanjiyam*
*Christian Theological Seminary,*
*Maruthanarmadam,*
*Chunnakam, Jaffna.*
*Sri Lanka.*

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை. 2001 021-2378